Registered as a Newspaper in Ceylon

# ஈழநாடு

EELA NADU

போன்: 389 National Tamil Daily தேசிய தினசரி தபால் பெட்டி எண் 49

விலை சதம் 10

மலர் 7 யாழ்ப்பாணம் குரோதி மாசி 20 ஆம் நாள் ஷவ்வால் பிறை 28 (3 3 65) புதன்கிழமை இதழ் 23

லீலா பஞ்சாங்க சித்திரக் கலண்டர்

1965-ம் ஆண்டு கலண்டர் உங்கள் இல்லம் காரியாலயம், பொது நிலையங்களில் பாவிப்பில் இருக்கின்றதா? இல்லையேல் உங்கள் அருகாமையிலுள்ள வியாபாரியிடம் கேட்டு வாங்கவும்

அல்லது

செ. ஆ. செ. கம்பெனியில்

கேட்கவும்

110, ஆஸ்பத்திரி வீதி,

பெரியகடை, யாழ்ப்பாணம்.

# தஹநாயகாவின் குற்றச்சாட்டு தவறானது

## இடதுசாரி தலைவர் எவரும் சதியாலோசனை செய்யவில்லை

### பிரதமர் சிறிமாவோ மறுப்பு

கொழும்பு, செவ்வாய் அரசாங்கத்திலுள்ள ஒருமுக்கிய இடதுசாரித் தலைவர் சீனர் ஒருவருடன், சிற்றுண்டிச்சாலை ஒன்றில் நாட்டுக்கு விரோதமான சதியாலோசனையில் ஈடுபட்டிருந்தார் என முன்னாள் காலி எம். பி. திரு. தஹநாயகா காலியில் கூறியதாக குறிப்பிட்ட இரு பத்திரிகைகளில் (ஈழநாடு அல்ல) பிரசுரிக்கப்பட்ட குற்றச்சாட்டினை பிரதமமந்திரி மறுத்திருக்கிறார்.

பிரதம மந்திரி காரியாலயம் இன்று விடுத்துள்ள அறிக்கையின் சாராம்சம் வருமாறு:-

“பத்திரிகைச் செய்தியின்படி இத்தகவலை தமக்குக் கொடுத்தவர் ஸ்ரீ லமகாரகம அபேட்சகர் திரு. எதிரிசூரியா என தஹநாயகா அறிவித்திருந்தார். இது சம்பந்தமான தகவலைத் தெரிவிக்கத் தயாராய் இருப்பதாக திரு. தஹநாயகா அறிவித்ததைத் தொடர்ந்து, அவரது வாக்குமூலத்தைப் பதிவு செய்யும்படி பொலிசாருக்கு உத்தரவிடப்பட்டது. அதன்படி வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

பின் திரு. எதிரிசூரியாவை பொலிசார் விசாரணை செய்த போது, தாம் அவ்வாறு தஹநாயகாவிடம் கூறவில்லை என அவர் மறுப்புத் தெரிவித்திருந்தார்.

சில காலமாக தாம் திரு. தஹநாயக்காவைச் சந்திக்கவில்லை என்றும் அவர் கூறினார். பொலிசார் விசாரணையின்படி குறிப்பிட்ட சம்பவம் நடந்ததாகக் கூறப்படும் சமயத்தில் (பெப்ரவரி 9-ம் திகதி) திரு. எதிரிசூரியா காலியில் இல்லை என்றும், அம்பாந்தோட்டையில் இருந்தார் என்றும் தெரியவருகிறது.”

வடபகுதி அசைஸ்

## சிசுக் கொலை வழக்கில் எதிரி விடுதலையானார்

### “கோணலானதீர்ப்பு வழங்கும் நிர்ப்பந்தம் ஏற்பட்டது” — நீதியரசர்

யாழ்ப்பாணம், புதன் “நான் நீதிபதியாக கடமையாற்றிய இந்தக் காலத்திலும் மிக கோணலான தீர்ப்பை வழங்கவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்ட முதல் வழக்கு இதுவேயாகும். இவ்விதமான முடிவுக்கு ஜூரர்கள் வந்திருப்பது பெரும் ஆச்சரியத்துக்குரியதாகும். அதுவும் ஜூரர்களில் பெரும்பான்மையினர் ஆசிரியராயிருந்தும் இவ்வித முடிவுக்கு வந்தது பெரும் ஆச்சரியமே. எனினும் ஜூரர்களின் முடிவை நான் ஏற்கவேண்டியுள்ளது”

இவ்வாறு கோண்டாவில் சிசுக்கொலை வழக்கில் ஜூரர்களின் தீர்ப்பை ஏற்று எதிரியை விடுதலை செய்து தீர்ப்பளிக்கையில் நீதியரசர் பி. ஸ்ரீஸ்கந்தராஜா குறிப்பிட்டார். எதிரி குற்றவாளியல்ல என ஜூரர்களில் 5 பேரும் அதற்கு மாறாக 2 பேரும் வாக்களித்தனர்.

இவ்வழக்கில் 1964-ம் ஆண்டு ஜனவரி 23-ல் கோண்டாவிலைச் சேர்ந்த கதிரன் செல்லன் என்பவர் தனது 15 வயது மகள் சரஸ்வதிக்குப் பிறந்த நாமமிடப்படாத குழந்தையைக் கொலை செய்ததாக குற்றஞ் சாட்டப்பட்டிருந்தது.

எதிரி சார்பில் ஆஜரான வழக்கறிஞர் திரு. எஸ். நாகராஜாவும், முடிக்குரிய வழக்கறிஞர் திரு. சில்வாவும் தோ

(6-ம் பக்கம் பார்க்க)

## நியூஸிலந்து 315 ரன்கள் முதல்டெஸ்ட் – முதல்இன்னிங்ஸ்

சென்னை, மார்ச் 2 இந்தியாவுக்கும் நியூஸிலந்துக்குமிடையே இங்கு நடைபெற்றுவரும் முதலாவது கிரிக்கெட் டெஸ்ட் போட்டியில் நியூஸிலந்து கோஷ்டி தன் முதல் இன்னிங்ஸில் 315 ரன்கள் எடுத்து அவுட்டானது.

இச்செய்தி அச்சுக்குப் போகும்வரை இந்தியக் கோஷ்டி தன் 2-ம் இன்னிங்ஸில் 2 விக்கெட் நஷ்டத்திற்கு 199 ரன்கள் எடுத்து ஆட்டத்தை முடித்துக்கொண்டது. இன்றைய ஆட்டத்தில் பந்து வீச்சினால் காயம் ஏற்பட்டதால் இந்திய ஆட்டக்காரர் சர்தேசாய் விளையாட முடியாமல் வாபஸ்பெற வேண்டி ஏற்பட்டது.

## ‘ஈழநாடு’ சூருவளி நிதி

சூருவளியால் பாதிக்கப்பட்டு கஷ்டமுறும் மக்களுக்கு மாதம் தோறும் உதவ என ‘ஈழநாடு’ சூருவளி கஷ்ட நிவாரணநிதிச் சபையினால் ஆரம்பிக்கப்பட்ட மாத உதவித் திட்டத்துக்கு இரண்டாம் தவணையாக நேற்று பணம் செலுத்தியோர் விபரம் வருமாறு:-

எஸ். சுவாமிநாதன், இளைப்பாறிய அதிபர், மயிலிட்டி ரூபா 10 00

‘ஈழநாடு’ சூருவளிநிதிக்கு பொருளாகவும் பணமாகவும் நேற்றுவரை 26 585 ரூபா 21 சதம் சேர்ந்துள்ளது.

## விலக்கப்பட்டனர்

கராச்சி, மார்ச் 2 கட்சி விதிகளை மீறி தேர்தலில் போட்டியிட முயன்றதற்காக கிழக்கு பாகிஸ்தான் பாகிஸ்தான் முஸ்லிம் லீக் கட்சியிலிருந்து 60 அங்கத்தினர்கள் விலக்கப்பட்டார்கள். மேற்கு பாகிஸ்தான் லீக்கிலிருந்து 21 பேர் சென்றவாரம் விலக்கப்பட்டார்கள்.

மொண்டிவிடியோ, மார்ச் 2 இங்கு ஏற்பட்ட பெரும் வெடிவிபத்து காரணமாக 28 பேர் கொல்லப் பட்டனர். 100 பேரைக் காணவில்லை. 50 பேர் படுகாயம் அடைந்தனர்.

## வடபகுதியில் சேவை புரியும் 150 பஸ்கள்

### பழைய பஸ்கள் படிப்படியாக அகற்றப்படும்

யாழ்ப்பாணம், புதன் வடபகுதியில் தற்போது சுமார் 150 பஸ்கள் சேவையிலிருந்து வருகின்றன என்றும் கடந்த மூன்று மாதங்களாக பஸ் சேவையில் விருத்தி ஏற்பட்டு வருவதாயும் தெரிவிக்கப்படுகிறது.

இந்தத் தொகையில் பழைய பஸ்களும் அடங்கும். ஏற்கெனவே சேவையிலுள்ள பழைய பஸ்கள் படிப்படியாகச் சேவையிலிருந்து குறைக்கப்பட்டு, அதற்குப் பதிலாக புதிய பஸ்கள் புகுத்தப்படவிருக்கின்றன.

இந்த ஆண்டுக்குள் வடபகுதி பஸ்சேவை நாட்டின் சிறந்த பஸ்சேவைகளில் ஒன்றாய் இருக்கும் எனவும், போக்குவரத்து மந்திரி இவ்விஷயத்தில் தீவிர அக்கறை செலுத்தி வருவதாயும் அறிவிக்கப்படுகிறது.

வடபகுதி பஸ்சேவை சுமார் 50 பாதைகளில் நடைபெற்று வருகிறது.

## 2.78 அங்குல மழை

யாழ்ப்பாணம், புதன் நேற்று அதிகாலை தொடக்கம் பிற்பகல் 2-30 மணிவரை யாழ்ப்பாணப் பகுதியில் 2.78 அங்குல மழை பெய்தது. கிளிநொச்சி, வவுனியாப் பகுதிகளிலும் கனத்த மழை பெய்ததாக அறியப்படுகிறது.

பிற்பகல் தொடர்ந்து மழை பெய்து கொண்டிருந்தமையால் டவுன் தேர்தல் கூட்டங்கள் ஒத்திப் போடப்பட்டன.

டயரும்ஸ்

தேவை

கைத்தறி நெசவு ஆசிரியை

மேற்குறிப்பிட்ட பதவிக்கு பெண்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

“டயரும்ஸ்” ஸ்தாபனம், 54, பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு 8-3-65 அன்றோ அதற்கு முன்னரோ கிடைக்கக் கூடியதாக விண்ணப்பிக்கவும்.

தகைமைகள்

1. நெசவுப் பயிற்சித் தராதரப் பத்திரம் பெற்றிருத்தல் வேண்டும்.
2. ஐந்து வருடங்கள் அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.
   அனுபவத்திற்கேற்ப சம்பளம் வழங்கப்படும்.

கைத்தறி நெசவாளர்:

இப்பதவிக்குப் பெண்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

மேற்குறிப்பிட்டுள்ள முகவரிக்கு 10-3-65 அன்றோ அல்லது முன்னரோ கிடைக்கக் கூடியதாக விண்ணப்பங்கள் அனுப்பப்படல் வேண்டும்.

தகைமைகள்

1. கனிட்ட பாடசாலைத் தராதரப் பத்தி... பெற்றிருத்தல் வேண்டும்.
2. இருவருட அனுபவம் பெற்... வேண்டும்;
3. வர்ண (Design) வேலையில் தகு... வர்களுக்கு முன்னுரிமை (F... கொடுக்கப்படும்.

(மேற்குறிப்பிட்ட இரு பதவிகளுக்... இடவசதி செய்து கொடுக்கப்படும்...

மனிவாசகர்

தனி மனிதனின் சுதந்திரமே ஜனநாயகத்தின் ஆணிவேர். கல்வி, செல்வம், பதவி, புகழ் அனைத்துக்கும் மேலான முக்கியத்துவம், தனிநபர் சுதந்திரத்திலேயே தங்கியிருக்கிறது.

— யாரோ


ஈழநாடு

EELA NADU National Tamil Daily. Post Box: 49, Jaffna. Telegrams: 'EELA NADU' Jaffna Phone: 389.

யாழ்ப்பாணம் குரோதி ஆண்டு மாசி மீ 20 உ. (3-3-65)


## ஒரு ஆளுக்கு ஒரு ஓட்டு

வாக்காளர் ஜாபிதாவில் ஏற்பட்டிருக்கும் தவறுகளை, குறிப்பாக ஒரே வாக்காளரின் பெயர் இரு தொகுதிகளில் காணப்படுவதை நீக்க தம்முடன் ஒத்துழைக்கும்படி தேர்தல் கமிஷனர் விண்ணப்பித்திருப்பதை, அரசியல் கட்சிகள் உடனடியாகப் பயன்படுத்திக் கொள்வது அவசரமும் அவசியமுமாகும்.

குறிப்பிட்ட சில தொகுதிகளில் இவ்வாறு ஒரே வாக்காளரின் பெயர் இரு இடங்களில் காணப்பட்டவிஷய பத்திரிகைகளால் எடுத்துக் காட்டப்பட்டதைத் தொடர்ந்து, இந்த வேண்டுகோள் விடுக்கப்பட்டிருக்கிறது.

1963-ம் ஆண்டு வாக்காளர் இடாப்பைத் திருத்தியமைக்க 18 மாதங்கள் பிடித்ததென்றும், இந்த இடைக்காலத்தில் சில வாக்காளர்கள் வேறு இடங்களிலுள்ள வாசஸ்தலங்களுக்கு மாறிச் சென்றிருக்கக்கூடுமாதலால் இரண்டு இடங்களில் அவர்களது பெயர் இடாப்பில் இடம்பெற்றிருக்கக்கூடும் என்றும் தேர்தல் கமிஷனர் கூறுவது சரியாய் இருக்கலாம்.

ஆனால் ஒரே வாக்காளர் இருமுறை வாக்களிப்பது சட்டப்படி குற்றமாதலால், இவ்வித குற்றத்தை இழைப்பதற்குச் சந்தர்ப்பம் அளிக்காமலிருக்க தேர்தல் கமிஷனர் உடனடியாக தீவிர முயற்சிகள் மேற்கொள்ள வேண்டும் என எதிர்பார்க்க நமக்கு உரிமை உண்டு. ஆள்மாறாட்டத்தைத் தடுக்க இந்தியாவில் செய்யப்பட்டதுபோல் ஒருமுறை வாக்களித்தவர்களின் விரல்களில் அழியாத மை அடையாளம் இடுவதும் வரவேற்கத்தக்கது.

ஒரு ஆளுக்கு ஒரு ஓட்டு என்பதுதான் ஜனநாயகத்தின் அஸ்திவாரம். இது தவறாகப் பிரயோகிக்கப்பட்டால் [illegible] அஸ்திவாரத்தில் ஓட்டை [illegible] பலவீனப்பட்டுவிடும். [illegible] சம்பிரதாயத்தின் [illegible] லட்சியத்துக்கு அது [illegible] ஆனமாகும்.

[illegible] ஜனநாயகத் [illegible]படி பேணிக் [illegible]தல் வாக்கு [illegible] ஒவ் [illegible]த்

வாக்கை உபயோகிக்க வேண்டும். வயோதிபர்கள், நோயாளர்கள், பலவீனர்கள், பெண்கள் உட்பட அனைவரும் தங்கள் வாக்கை கட்டாயமாகப் பிரயோகிப்பதன்மூலம் சரியான ஜனநாயக சம்பிரதாயத்தை நாட்டில் ஏற்படுத்தலாம்.

வாக்குரிமையை கட்டாயமாகப் பிரயோகிக்க வேண்டும் என்ற நிர்ப்பந்தம் நமக்குக் கிடையாது. ஜனநாயகம் நமக்கு அளித்திருக்கும் சுதந்திரங்களில் இதுவும் ஒன்று. ஆனால் சுதந்திரமான சிந்தனைக்கும் செயலுக்கும் இடங்கொடுத்திருக்கும் அந்த ஜனநாயகத்தைப் பாதுகாப்பதை நாம் கட்டாய கடமையாகக் கொள்ள வேண்டும். ஒவ்வொருவரும் தங்கள் வாக்கைச் செலுத்துவதே அதற்கான வழி.

எனவே தேர்தல் கமிஷனர் விடுத்திருக்கும் வேண்டுகோளைத் தொடர்ந்து அரசியல் கட்சிகள் உடனடியாக அவருடன் ஒத்துழைத்துத் தவறுகளைத் திருத்தட்டும்.

தென்கிழக்காசிய அரங்கில்:

# வியட்னாம் பிரச்னை

— லூயிஸ் ஹலாஸ் —

'தென்வியட்னாமின் போர் நீட்சி உலகின் சமாதானத்திற்கு மிகவும் அபாயகரமான மிரட்டலாய் விளங்கக்கூடும்" என்று ஐ. நா. பொதுக்காரியதரிசி ஊதாண்ட் கூறியிருப்பதுபோல அதன் நிலைமை நிச்சயிக்க முடியாதபடி இருக்கிறது. அமைதிக்காக ஊதாண்ட் போராடுவதில் இரு முக்கிய குறிக்கோள்கள் இருக்கின்றன. முதலாவது அமைதிகாப்பு நடவடிக்கைகளுக்கான சந்தா செலுத்துவதில் ஏற்பட்ட முட்டுக்கட்டையால், அத்தஸ்து பாதிக்கப்பட்டிருக்கும் உலக நிறுவனம் மீண்டும் உயிர்பெற்றிருப்பதுடன் மற்றொரு சமாதான முயற்சியை மேற்கொள்ளத் தயாராய் இருக்கிறது. இரண்டாவது எத்தகைய தீர்விலும் ஐ. நா.வை அதில் முழுமையாக ஈடுபடுத்த பொதுக்காரியதரிசி முனைந்துள்ளார் என்று சிலர் நினைக்கின்றனர். ஐ. நா. அரசியல் ஆய்வாளர்களின் கருத்துப்படி தென்வியட்னாம் நிலையை கீழ்க்கண்டவாறு வர்ணிக்கலாம்.

தென்வியட்னாமுக்கான அமெரிக்காவின் எதிர்கால இராணுவ அரசியல் உபாயங்கள் பற்றி ஒன்றும் அறியமுடியாது என்றபோதிலும் வாஷிங்டனின் ஆரம்ப லட்சியம் தெளிவானதாகும். தென்வியட்னாமுக்குக் கொரியா மாதிரியிலான தீர்வு பெறுவது என்பதே அது. அதன்மூலம் தென்வியட்னாமில் கம்யூனிஸ்டுகளுக்கு இடமளிக்க மறுப்பதாகும்.

ஆனால் கம்யூனிஸ்ட் சீனா என்ன சாதிக்க விரும்புகிறது என்பதில் யாருக்கும் அதிகம் ஐயமில்லை. அதுதான் தனது ஆதிக்கத்தை விரிவுபடுத்துவதாகும். தனது ஆதிக்கத்தை முதலில் இந்தோசீனாவிலும் பின்னர் படிப்படியாக தென்கிழக்காசியாவிலும் ஸ்டாலின் பாணியில் இரண்டாவது உலகப் போருக்குப் பின் கிழக்கு ஐரோப்பாவில் பெருக்கப்பட்டதுபோல் விரிவாக்குவதே பீகிங்கின் உள்நோக்கமாகும். இந்த லட்சியத்தை நிறைவேற்ற பீகிங் எவ்வளவுதூரம் சிரமம் எடுத்துக்கொள்ளும் என்பதுதான் பிரச்னையாகும். மாஸேதுங் அரசாங்கம் அதன் உண்மையான சக்தியை அதிக மதிப்பீடு செய்துகொண்டிருக்கிறதா அல்லது அமெரிக்காவின் உறுதியைத்தப்புக்கணக்குப்போட்டுவிட்டதா என்பதைப் பொறுத்தே அது சார்ந்திருக்கிறது. இவ்விஷயத்தில் பீகிங்கின் அறிக்கைகள் தெளிவற்று இருக்கின்றது. வியட்னாமில் எங்கள் உரிமையை எங்ஙனம் பயன்படுத்துவது என்பது எங்கள் விவகாரமாகும். என்று கம்யூனிஸ்ட் சீன அரசாங்கத்தின் முதல் அறிக்கை கூறியது. இரண்டாவது அறிக்கையின் போர்வெறியின் நாற்றம் அதிகம் வீசியது. 'சீன மக்கள் நீண்டகாலமாய்த் தயாராகிவருவதுடன் அமெரிக்க ஆக்கிரமிப்பாளர்களை விரட்டுவதில் வியட்னாமுக்கும் இந்தோசீனாவுக்கும் எங்ஙனம் உதவுவது என்பதும் அதற்குத் தெரியும்" என்று அந்த அறிக்கை கூறியது. வடவியட்னாமுக்கு எதிராக அமெரிக்கத் துருப்புக்கள் இறங்கினாலே சீனா தலையிடும் என்று அவ்வறிக்கை தொனிப்பதாய் இருந்தாலும் அவ்வாறு அமெரிக்கா செய்யும் என்று எதிர்பார்க்கப்படவில்லை.

சீனா அணுக்குண்டு ஆற்றல் பெற்றதின் காரணமாக, சீனத் தலைவர்களை நிமிர்ந்து பேசத் தூண்டியிருக்கலாம் என்று ஐ. நா. விலுள்ள பலர் நினைக்கின்றனர். இராணுவ மோதல்களில் சீனாவின் அணு ஆற்றல் அணுக்குண்டுப் போருக்கு அழைப்பு விடுக்க நேரிடலாம்; அத்தகைய சண்டை ஏற்பட்டால் எவ்வளவு பெரிய பிரதேசத்தையும் மக்களையும் பெற்றிருந்தாலும் சீனா உயிர் வாழ முடியாது என்பதே பலரது கருத்தாகும்.

ரஷ்யாவின் நிலைமை மிகவும் கடினமானதாகவே இருக்கிறது என்று கருதப்படுகிறது. ஒரு பக்கத்தில் அதன் ஆசியத் தோழர்களுக்கு உதவ அது தவறிவிட்டால் ஆசியக் கம்யூனிஸ்ட் இயக்கத்தில் பீகிங் வகித்துவரும் தலைமைத்தத்துவத்தைத் திரும்பக் கைப்பற்றும் வாய்ப்புகள் மங்கிவிடும். மறு பக்கத்தில் ரஷ்யா தலையிட்டால் அமெரிக்காவுடன் அணு எதிர்ப்பை எதிர்நோக்க நேரிடும். அத்தகைய எதிர்ப்பிலிருந்து 1962-ல் ஏற்பட்ட கியூபா நெருக்கடியின் போது ரஷ்யா பின்வாங்கிவிட்டது. அணுப்போர் இல்லாமல் தென்கிழக்காசியாவிலிருந்து அமெரிக்காவை வெளியேற்றுவதில் பீக்கிங்கிற்கும், ஹனோய்க்கும் உதவ ரஷ்யா முன்வந்தால், ஆசியாவில் சீனா ஆதிக்கம் பெறுவதற்குத்தான் அது உதவும் என்றும் அதன் சமபலத்திற்கு எதிராக அமெரிக்கச் செல்வாக்குத் தொடர்ந்து இருப்பதை ரஷ்யா விரும்பலாமென்றும் ஐ. நா.வில் உணரப்படுகிறது. இந்தக் காரணத்திற்காகவே சோவியத்தின் அறிக்கைகள் தன்னைக் கட்டுப்படுத்திக்கொள்ளாதவைகளாக இருந்தன. மாஸ்கோவுக்கும், பீக்கிங்கிற்கும் பரிவர்த்தனை செய்துகொள்ளப்பட்ட செய்திகளில் வெவ்வேறு தொனி ஒலித்தது. இத்தகைய சூழ்நிலைகளைக் கருத்தில் கொண்டு நோக்குகையில் அமெரிக்காவோ ரஷ்யாவோ தங்களை நேருக்கு நேர் மோதவைக்கும் போர் விஸ்தரிப்பை விரும்பவில்லை என்று உணரப்படுகிறது. மேலும் தென்கிழக்காசியாவில் பீக்கிங்கின் மேலாதிக்கம் நிலவும் சூழ்நிலையையும் விரும்பவில்லை. வியட்னாம் நிலைமைகளை பாதுகாப்புக் கவுன்சிலுக்கு அமெரிக்கா அவ்வப்போது அறிவித்துவருகிறது, ஆனால் கவுன்சில் கூட்டத்திற்கு ரஷ்யாவோ அன்றி அமெரிக்காவோ கோரிக்கை விடுக்கவில்லை. இதன் மூலம் ஏற்படும் வாய்ச்சண்டைகளுக்கு இடமளிக்க இரு நாடுகளும் விரும்பவில்லை என்பதையே இது உணர்த்துவதாக வியாக்கியானம் செய்யப்பட்டது.

இதன் காரணமாகவே முக்கிய தரப்புகளுக்கிடையே விஸ்தாரமான அதிக அளவில் ஆலோசனை நடைபெறுவதற்குப் பேச்சுவார்த்தை நிகழ வேண்டும் என்று ஐ. நா. பொதுச்செயலாளர் யுதாண்ட் அறைகூவல் விடுத்தார். இரு பெரும் வல்லரசுகள் நிலை சீர்குலைவதற்குமுன், வழிவகைகள் காண்பதற்கு இதுவே நல்ல தருணம் என்று அவர் உணர்கிறார். மேலும் ஐ. நா.வில் வியட்னாம் நெருக்கடி குறித்து விவாதிக்கப்படுவதைக் காட்டிலும், பீக்கிங்கும் பங்குபெறக்கூடிய ஜெனிவா மகாநாட்டின் மூலம் பரிகாரம் காணலாம் என்றும் அது வியட்னாமிய சூழ்நிலையைச் சார்ந்தப்படுத்தும் என்றும் ஐ. நா. வட்டாரங்களில் உணரப்படுகிறது.

# 32 வருடத்தில் ஹாங்காங் சீனாவுக்கு சேரும்

— ஸ்டுவார்ட் கிரிபின் —

காலம் குறுகியதாக இருந்தாலும் கிழக்கில் ஒருகாலும் மேற்கில் ஒருகாலுமாக விளங்கும் பிரிட்டிஷ் காலனியான ஹாங்காங் பொருளாதார வளர்ச்சியை அனுபவித்துக் கொண்டிருக்கிறது. இன்னும் ஒருதலைமுறைக்குள் பிரிட்டன் அங்கிருந்து வெளியேற்றப்படுமென்பதில் யாரும் ஐயம் கொள்ளமுடியாது. அதாவது 1997ம் ஆண்டு ஜூலை மாதம் முதல்தேதியன்று பழைய சீன நீதிமன்றத்தில் செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தம் காலாவதியாகிறது. அப்போது பிரிட்டிஷார் தங்கள் பகுதியின் 90 சதவிகிதப் பிராந்தியத்தை அல்லது கம்யூனிஸ்ட் சீனாவின் எல்லையோடு ஒட்டிய பெருநிலத்தின் 365 மைல் பகுதியை இழக்கநேரிடும். அந்த ஒப்பந்தத்தின் கீழ் பெரும்பாலும் விவசாய தாதுப்பொருள் அடங்கிய பகுதியாக இருக்கும். புதிய பகுதிகள் (அவற்றில் நான் இப்போது பெருநிலத்திலிருந்து வந்த அகதிகள் வாழ்கின்றனர்) எந்த அரசாங்கம் இருப்பினும் பீக்கிங்கிடம் ஒப்படைக்கப்படவேண்டும். பீக்கிங் சம்மதித்தால் விக்டோரியா என அழைக்கப்படும் ஹாங்காங்தீவையும் கௌலூன் என அழைக்கப்படும் பெருநிலப்பகுதியையும் அதன் சுற்றுப்புறப் பகுதிகளையும் சிதறிய தீவுப்புறங்களையும் பிரிட்டன் வைத்துக்கொள்ளும்.

எத்தகைய அரசாங்கம் ஆட்சிபீடத்தில் இருந்தபோதிலும் புதியபிராந்தியங்களைத்திருப்பி ஒப்படைக்குமாறு அது கோருமென்றும் இதன்மூலம் ஹாங்காங் தீவு கௌலூன் ஆகியவற்றின் காலம் கேள்விக்குரியதாக ஆக்கப்படுமென்றும் பல கவனிப்பாளர்கள் நம்புகின்றனர். நிலப்பகுதியும் வளங்களும் இல்லாமல் அவை உயிர்வாழ முடியுமென்பது ஐயத்திற்குரியதாகவே கருதப்படுகிறது. அப்பகுதிகளின் குத்தகை விவரங்கள் ஹாங்காங்கில் 75 ஆண்டுகள் வரி விதிப்புக்குப் பின் மேலும் 75 ஆண்டுகளுக்குப் புதுப்பித்துக் கொள்ளலாம். எல்லா நிலத்திற்கும் பிரிட்டிஷ் அரசுக்கே முழு உரிமையுண்டு. புதிய பிராந்தியங்களில் குத்தகைகள் ஒருமுகப்படுத்தப்பட்டு விலைகளும் மிதமாக்கப்பட்டிருக்கின்றன. 1997ம் ஆண்டு ஜூன் மாதம் 30ந் தேதி நள்ளிரவுக்கு 72 மணிநேரத்திற்கு முன் எல்லாக் குத்தகைகளும் காலாவதியாகின்றன. சீனர்கள் ஆக்கிரமித்துக்கொள்ள நினைத்தால் சில நாட்களில் அதிக பாதுகாப்பற்ற ஹாங்காங்கை பிரிட்டிஷார் பறிகொடுக்கநேரிடும். 1941ல் ஜப்

(6-ம் பக்கம் பார்க்க)

## காணாமல் போன மாலுமி

கொழும்பு, செவ்வாய்

சீனாவிலிருந்து அரிசிகொண்டுவந்த மாலுமிகள் கோஷ்டியைச் சேர்ந்த ஒருவர் காணாமல் போய்விட்டார் என்றும் அவரைப்பற்றிய தகவல் எதுவும் தெரியவில்லை என்றும் அக்கப்பல் அதிகாரி தெரிவித்துள்ளார்.

சீனாவிலிருந்து அரிசிகொண்டு வந்து கொழும்பு துறைமுகத்தில் இறக்கிக் கொண்டிருக்கும் கப்பலைச் சேர்ந்த 21 வயது நிரம்பிய ஜெர்மன் மாலுமி ஒருவர் சுகவீனம் காரணமாக கொழும்பில் உள்ள தனிப்பட்ட ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார் எனவும் இவருடன் கூடச்சென்ற பிரதிநிதியிடம் கப்பலுக்குச் செல்வதாதக கூறிவிட்டு குறிப்பிட்ட மாலுமி புறப்பட்டார் எனவும் ஆனால் அவர் கப்பலுக்குச் செல்லவில்லை என்றும் அறியப்படுகிறது.

இவரைப்பற்றிய தகவல் கொடுப்பவர்களுக்கு சன்மானம் வழங்கப்படும் என கப்பல் அதிகாரி தெரிவித்தார்.

## இளைப்பாறியோரின் கோரிக்கை

கொழும்பு, செவ்வாய்

தங்கள் பென்ஷன்பணத்தை அதிகரிக்குமாறு ஓய்வுபெற்ற அரசாங்க ஊழியர் சங்கம் நிதி மந்திரி டாக்டர் என். எம். பெரேராவுக்கு அனுப்பி வைத்துள்ள மகஜர் ஒன்றில் கோரியுள்ளது. சமஸ்த லங்கா ராஜ்ய விசாகம பெருஞ் சங்கமயவின் தலைவர் திரு. ஏ. எஸ். பிரேமசேகரா நிதி மந்திரிக்கு அனுப்பியுள்ள மகஜரில் ஓய்வு பெற்ற ஊழியர்களுக்கு 15 சலுகைக் கோரிக்கைகளை குறிப்பிட்டுள்ளார்.

பென்ஷன் பணத்துக்கு வரி விதிக்கக் கூடாது எனவும், விதவை அனாதை பென்ஷன் அதிகரிக்கப்பட வேண்டும் எனவும், வீட்டு வாடகை அலவன்ஸ், ஆஸ்பத்திரி வசதிகள் செய்து தரப்பட வேண்டும் எனவும் பென்ஷன் பணத்தில் முன்பணம் கொடுக்கப்பட வேண்டும் எனவும் இதை மாதம் மாதம் பென்ஷன் பணத்திலிருந்து கழித்துக் கொள்ளலாம் எனவும் அந்த மகஜரில் கோரப்பட்டுள்ளது.

## வாக்களிக்க லீவு

கொழும்பு, செவ்வாய்

தொழிலாளர்கள் விண்ணப்பம் செய்யுமிடத்து தேர்தல் தினத்தன்று அவர்களுக்கு 4 மணித்தியாலங்களுக்கு குறையாத லீவு வழங்கப்பட வேண்டும் என்ற தேர்தல் சட்டத்துக்கு இணங்க அரசாங்க ஊழியர்களுக்கு அன்றைய தினம் லீவு வழங்க திறைசேரி அனுமதித்துள்ளது. இந்த லீவு சாதாரண லீவுக்கு புறம்பானதாகவே கருதப்படும்.

## வாலிப முன்னணி அங்குரார்ப்பணம்

துணுக்காய், செவ்வாய்

சென்ற சனிக்கிழமை யோகபுரம் 1-ம் பகுதி பாரதி கிராம முன்னேற்றச் சங்க மைதானத்தில் நடைபெற்ற இ. த. அரசுக் கட்சிப் பிரசாரக் கூட்டத்தில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் யோகபுரம் 1-ம் பகுதிக் கிளை வாலிப முன்னணி ஒன்று அங்குரார்ப்பணம் செய்யப்பட்டுள்ளது.

நிர்வாகிகள் விபரம்வருமாறு: தலைவர்: செ. அரியரத்தினம், உபதலைவர்: சி. குணரத்தினம், செயலாளர்: கு. சிவஞானம், உப செயலாளர்: க. வேலுப்பிள்ளை, தனாதிகாரி: இ. செல்வச்சந்திரன்.

# வியட்நாம் நெருக்கடிக்கு கூட்டு நடவடிக்கை

## மண்டலசார்பற்ற நாடுகள் மேற்கொள்ள யூகோ ஜனாதிபதி டிட்டோ யோசனை

### "ஜனாதிபதி ஜோன்ஸனுக்கு ரஷ்ய அழைப்பு மாறவில்லை" —கோஸிஜின்

பெல்கிரேட், மார்ச் 2

வியட்நாம் நெருக்கடியைத் தீர்க்க மண்டலசார்பற்ற நாடுகள் கூட்டு முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என யூகோஸ்லேவிய ஜனாதிபதி டிட்டோ அல்ஜீரிய ஜனாதிபதி பென்பெல்லாவுக்கு யோசனை கூறியிருக்கிறார். அதேசமயம் டில்லியிலுள்ள யூகோஸ்லேவிய தூதர், பிரதமர் சாஸ்திரியைச் சந்தித்து வியட்நாம் பிரச்னைபற்றிய டிட்டோவின் கடிதம் ஒன்றை நேற்றுச் சமர்ப்பித்தார்.

**தேர்தல் ரத்து**

தென்வியட்நாமில் வருகிற 21-ம் திகதி நடைபெறவிருந்த பொதுத்தேர்தல், நாட்டின் நெருக்கடியான நிலையை முன்னிட்டு ரத்துச் செய்யப்பட்டிருக்கிறது.

**அழைப்பு நீடிக்கும்**

வடவியட்நாமில் அமெரிக்கா ஆக்கிரமிப்பு நடத்திவந்த போதிலும், தாம் ஜனாதிபதி ஜோன்ஸனுக்கு விடுத்த அழைப்பு அமுலில் இருக்கும் என ரஷ்யப் பிரதமர் திரு கோஸிஜின் நிருபர்களிடம் அறிவித்தார். இரு மாதங்களுக்குமுன் ரஷ்யாவுக்கு வருமாறு ஜனாதிபதி ஜோன்ஸனுக்குத் தாம் கடிதம் அனுப்பியதாகவும் இன்னும் அதற்குப் பதில் கிடைக்கவில்லையென்றும் கோஸிஜின் கூறினார்.

இதுசம்பந்தமாக வெளியிடப்பட்ட வெள்ளை மாளிகை அறிக்கை ஒன்றில் உத்தியோகபூர்வமான அழைப்பு எதுவும் அனுப்பப்படவில்லையென்றும் வாய்மூலம் அழைப்பு விடுக்கப்பட்டதென்றும் கூறப்பட்டிருக்கிறது. அமெரிக்க ஜனாதிபதியின் ரஷ்ய விஜயம், ரஷ்யத்தலைவர்களின் அமெரிக்க விஜயத்தை பொறுத்திருக்கும் என்றும் அறிக்கை கூறியது.

திரு. கோஸிஜின் நிருபர்களிடம் மேலும் பேசுகையில் வடவியட்நாமில் அமெரிக்க நடவடிக்கை குறித்து மீண்டும் எச்சரிக்கை விடுத்தார்.

**ரஷ்யா — பிரான்ஸ்**

இதற்கிடையில் தென்கிழக்காசியாவில் சமாதானத்தை ஏற்படுத்தும் முயற்சியில் ரஷ்யாவுடன் பிரான்சும் ஒத்துழைப்பது குறித்து பாரிசிலுள்ள ரஷ்யத்தூதர் பிரெஞ்சு வெளிநாட்டு மந்திரியிடம் கடிதம் ஒன்றைச் சமர்ப்பித்தார்.

தென்வியட்நாம் பிரதமர் விடுத்திருக்கும் ஒரு அறிக்கையில் வியட்காங் நடவடிக்கையும், சதியும் தொடர்ந்து நீடிக்கும்வரை, தமது நாடு சண்டையில் ஈடுபடும் எனக் கூறினார். வியட்நாமில் தமது அரசாங்கம் ஏற்றுக்கொள்ளாத எந்த சர்வதேசத் தீர்வையும் ஏற்க முடியாது என்றும் அவர் கூறினார். வியட்காங்கியர் போரையும் நாசவேலையையும் நிறுத்தி தென்வியட்நாம் சுதந்திரத்திற்கு உத்தரவாதம் அளிக்கும்வரை சமாதானப் பேச்சு சாத்தியமில்லையென்றும் அவர் கூறினார்.

**கள்ளத்தனமாக ஆயுதங்கள்**

வடவியட்நாம் தென்வியட்நாமுக்குள் சட்டவிரோதமாக ராணுவ சாதனங்களைக் கொண்டு வந்தது கண்டுபிடிக்கப்பட்ட விஷயம் குறித்து ஐ.நா. பிரதிநிதி சமர்ப்பித்த அறிக்கையை யுதாண்ட் நேற்று வெளியிட்டார். இந்த ஆயுதங்கள் மத்திய வியட்நாமில் காணப்பட்டன.

## நாகாலந்துக்கு 60 கோடி ரூபா

புதுடில்லி, மார்ச் 2

4-ம் ஐந்தாண்டுத் திட்டத்தில் நாகாலந்து அபிவிருத்திக்கு 60 கோடி ரூபாய் செலவிட உத்தேசிக்கப்பட்டிருக்கிறது.

## 3500 பேர் வந்தனர்

புதுடில்லி, மார்ச் 2

சென்ற மாதம் கிழக்குப் பாகிஸ்தானிலிருந்து 3500 பேர் திரிபுரா வந்தனர் என்றும், இதுவரை திரிபுரா வந்திருப்பவர்களின் மொத்த எண்ணிக்கை 1 லட்சத்தைத் தாண்டிவிட்டதென்றும் அறிவிக்கப்பட்டது.

## டில்லியில் யோக நிலையம்

புதுடில்லி, மார்ச் 2

சர்வதேச யோக நிலையம் ஒன்று புதுடில்லியில் நேற்று துவக்கிவைக்கப்பட்டது.

## சீனு உட்பட 5 நாடுகள் கூட்டம்

லண்டன், மார்ச் 2

ஆயுத போட்டியை முடிவுக்குக்கொண்டுவர சீனு உட்பட 5 அணு வல்லரசுகளின் மகாநாடு ஒன்றை நடத்துவது பற்றிப் பரிசீலனை செய்யப்போவதாய் பிரிட்டிஷ் வெளிநாட்டு மந்திரி திரு. ஸ்டுவர்ட் கூறினார்.

## முக்கிய விஜயங்கள்

புதுடில்லி, மார்ச் 2

செக்கோஸ்லோவேகிய பிரதம மந்திரி திரு. ஜோஸப் லெனர்ட் இன்று புதுடில்லி வந்தார். அவருடன் வெளிநாட்டு மந்திரியும் வந்திருக்கிறார்.

சிக்கிம் மகாராஜா நேற்று இந்தியா வந்திருக்கிறார்.

## அலங்கார உற்சவம்

புங்குடுதீவு, செவ்வாய்

புங்குடுதீவு மடத்துவெளி ஸ்ரீ பாலசுப்பிரமணிய சுவாமி கோவில் அலங்கார உற்சவம் வருகிற மார்ச் 22-ம் திகதி முதல் 31-ம் திகதிவரை நடைபெறும்.

## நாஸர் கி. ஜேர்மனி செல்வார்

கெய்ரோ, மார்ச், 2

ஐக்கிய அராபியக் குடியரசு ஜனாதிபதி நாஸர், கிழக்கு ஜெர்மனிக்கு வருமாறு விடுக்கப்பட்ட அழைப்பை ஏற்றுக் கொண்டிருக்கிறார்.

கிழக்கு ஜெர்மன் அதிபர் உல்பிரைட்டும், நாஸரும் நேற்று விடுத்த கூட்டறிக்கையில் இந்த விபரம் காணப்பட்டது.

ஐக்கிய அராபியக் குடியரசின் அபிவிருத்திக்கு கிழக்கு ஜேர்மனி 8 கோடியே 60 லட்சம் பவுன் கடன் வழங்கியிருக்கிறது.

# மாஸ்கோ மகாநாடு வெற்றியளிக்காது?!

## சீனுவின் தாக்குதலால் சிரமம் தோன்றியுள்ளது

மாஸ்கோ, மார்ச், 2

உலக கம்யூனிஸ்ட் இயக்கம் பற்றிய பிரச்னையை ஆராய 18 நாட்டு கம்யூனிஸ்ட்கட்சிகளின் இரகசிய மகாநாடு நேற்று ஆரம்பமாகியது.

இந்த மகாநாட்டில் 26 நாடுகள் கலந்து கொள்ளும் என முன்பு எதிர்பார்க்கப்பட்டது. முன்னாள் பிரதமர் குருஷ்சேவ் 26 கட்சிகளை மகாநாட்டிற்கு அழைத்திருந்தார்.

எனினும் சீனு, வடவியட்நாம் வடகொரியா, இந்தோனேஷியா, ஜப்பான், அல்பேனியா, ருமேனியா போன்ற நாடுகளின் பிரதிநிதிகள் மகாநாட்டில் கலந்து கொள்ளவில்லை.

உலக கம்யூனிஸ்ட் ஐக்கியத்திற்கு இந்த மகாநாடு உருப்படியான சேவை செய்வது சாத்தியமில்லை எனப்பார்வையாளர்கள் நம்புகின்றனர்கள்.

மகாநாடு பற்றி சீனு தாக்குதல் நடத்தியிருப்பது மேலும் சிரமத்தைத் தோற்றுவிக்கும் என மகாநாட்டு வட்டாரங்கள் கருதுகின்றன.

ரஷ்யத் தலைவர்கள் கபட வேடதாரிகளென்றும், கம்யூனிஸ்ட் ஐக்கியம் வெளிவேஷம் என்றும் சீனப்பத்திரிகை "பீகிங் டெய்லி" குறிப்பிட்டிருக்கிறது.

இத்தாக்குதல் ஐக்கியத்தை குலைத்து விட்டதாக நம்பப்படுகிறது.

# அயூப்பின் சீன விஜயம்: அணு விஞ்ஞானியும் போகிறார்!

டாக்கா, மார்ச் 2

சமீபத்திலோ அல்லது பின்போ காஷ்மீர் பிரச்னையைத் தீர்க்கும் நிர்ப்பந்த சூழ்நிலை இந்தியாவுக்கு ஏற்படும் என பாகிஸ்தான் ஜனாதிபதி அயூப்கான் சீனுவுக்குப் புறப்படுமுன் இங்கு கூறினார். ஜனாதிபதி அயூப்கானுடன் வெளிநாட்டுமந்திரி திரு. புட்டோவும் ஒரு அணுசக்தி விஞ்ஞானியும் சீனுவுக்குச் சென்றிருக்கிறார்கள். அதேசமயம் கராச்சியில் அணுசக்தி நிலையம் ஒன்றை அமைக்க கனடா பாகிஸ்தானுக்கு 5 கோடியே 10 லட்சம் டாலர் கடனளித்திருக்கிறது.

# "ஒன்றுபட்ட இனமாக வாழ சமஷ்டியே சிறந்தது"

## தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் தமிழரசு அபேட்சகர்

சாவகச்சேரி புதன்

"இலங்கையிலே ஒற்றை ஆட்சி நிலவுகின்ற காலத்திலே தான் தமிழினம் உரிமையிழந்து மிகவும் கேவலமான இந்நிலையில் வாழ்கின்றனர். இந்த நிலையிலே சமஷ்டி ஆட்சி மூலம்தான எமது உரிமைகளைப் பெற்றுக்கொள்ள முடியும். ஒற்றையாட்சி நாடுகள் பல சமஷ்டி ஆட்சியின் கீழ்தான் தங்களாது பிரச்னைகள் பல தீர்க்கப் பெற்றன. சமஷ்டி ஆட்சியின் மூலமே உரிமைகளைக் காக்க முடியும் என்று பல அரசியல் தலைவர்கள் கூறியிருக்கின்றனர். இந்தியாவின் தலைசிறந்த ராஜதந்திரி திரு. இராஜகோபாலாச்சாரி கூட இலங்கைக்குசமஷ்டி ஆட்சியே சிறந்தது என்று 1961-ம் ஆண்டில் கூறினர். இலங்கையின் காலஞ்சென்ற பிரதம மந்திரி திரு. எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயக்காவும் இலங்கையில் வாழுகின்ற மூன்று பெரும் இனமான தமிழர், கண்டிச் சிங்களவர், தென் இலங்கைச் சிங்களவர் ஆகியோரை இவர்கள் வாழுகின்ற மூன்று இடங்களையும் சுயாட்சிப் பிரதேசங்களாக மாற்றி ஒரு சமஷ்டி அமைப்பின் கீழேயே ஒன்றுபட்ட இனமாக வாழ வழி வகுக்க முடியும் என்று 1926-ம் வருடம் கூறியிருக்கின்றார்" என்று உடுவில் தொகுதி அபேட்சகர் திரு. வி. தர்மலிங்கம் எழுதுமட்டுவாள் சந்தை மைதானத்தில் நடைபெற்ற தமிழரசுக்கட்சித் தேர்தல்பிரச்சாரக் கூட்டத்தில் பேசுகையில் கூறினார்.

இக்கூட்டம் சாவகச்சேரித் தொகுதி அபேட்சகர் திரு. வ. ந. நவரத்தினத்தையும் பண்டிதர் கா. பொ. இரத்தினத்தையும் ஆதரித்து நடைபெற்றது.

திரு. வே. சங்கரப்பிள்ளையின் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் திரு. தர்மலிங்கம் தொடர்ந்து பேசியதாவது-

வடபகுதியில் பெட்ரோல் இருப்பதாக பல நிபுணர்கள் கூறியுள்ளனர். ஆனால் அது குறித்து அரசாங்கம் எந்த முயற்சியும் எடுக்கவில்லை. ஆனால் எமது கையிலே ஆட்சி இருந்தால் பொருளாதாரத்தை வளம்படுத்தியிருக்கலாம். வேலையில்லாத் திண்டாட்டத்தையும் நீக்கியிருக்கலாம். சமஷ்டி ஆட்சியில்தான் நாம் எமது பிரதேசத்தை வளமாக்க முடியும்."

சாவகச்சேரி அபேட்சகர் திரு. வ. ந. நவரத்தினம் பேசும்போது கூறியதாவது-

மிகவும் முக்கியமான இந்தத் தேர்தலிலே தமிழ்மக்கள் தங்கள் உரிமைகளுக்காகப் போராடக்கூடிய அரசியல் கட்சி எது என்று சிந்தித்து வாக்களிக்க வேண்டும். அதே நேரத்திலே தனிப்பட்டவர்கள் தமிழினத்தின் உரிமைகளைப் பெற முடியாது என்பதையும் உணர வேண்டும். எந்தவொரு கட்சியின் சார்பிலேதான் உரிமைப்போராட்டம் நடாத்தமுடியும். கட்சியென்றால் எல்லாம் கட்சிகள் அல்ல. கட்சிக்குத் தேவையானது புனித லட்சியம். இன்று இலங்கையிலே தமிழினத்தின் உரிமைக்காகப் போராடுகின்ற ஒரேயொரு கட்சி-ஜனநாயக ரீதியில் இயங்கிவருகின்ற ஒரு கட்சி தமிழரசுக் கட்சிதான்."

கிளிநொச்சி அபேட்சகர் பண்டிதர் கா. பொ. இரத்தினம்

(5-ம் பக்கம் பார்க்க)

# கம்போடியாவுக்கு சுகர்ணோ திடீர் விஜயம்

## இந்தோ சீன மகாநாட்டில் முக்கிய உரை நிகழ்த்துவார்

நாம்பெங், மார்ச், 2

இந்தோனேஷிய ஜனாதிபதி டாக்டர் சுகர்ணோ நேற்று கம்போடியாவுக்கு 4 நாள் திடீர் விஜயத்தை மேற்கொண்டிருக்கிறார். அவருடன் வெளிநாட்டு மந்திரி டாக்டர் சுபந்திரியோவும் வந்திருக்கிறார்.

டாக்டர் சுகர்ணோ நாம்பெங்கில் நடைபெறும் இந்தோ சீன மக்கள் மகாநாட்டில் முக்கிய சொற்பொழிவு ஒன்றை நிகழ்த்துவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஐ. நா. காரியதரிசி யுதாண்ட் இந்தோனேஷிய வெளிநாட்டு மந்திரி டாக்டர் சுபந்திரியோவுக்கு எழுதியுள்ள ஒரு கடிதத்தில் ஐ. நா. விலிருந்து இந்தோனேஷியா விலகியது குறித்து வருத்தம் தெரிவித்திருக்கிறார்.

சமயம் வரும்போது இந்தோனேஷியா ஐ. நா. வுடன் ஒத்துழைக்கும் என்றும் அவர் நம்பிக்கை தெரிவித்திருக்கிறார்.

இதற்கிடையில் இந்தோனேஷியாவிலுள்ள ஐ. நா. ஏஜென்ஸி அதிகாரிகள் நேற்று நாட்டைவிட்டுப் புறப்பட்டார்கள். அரசாங்கத்தின் வேண்டுகோள்மீது உலக சுகாதார ஸ்தாபன அதிகாரிகளில் சிலர் மட்டும் அங்கு தங்கியிருக்கிறார்கள்.

## 24 பெண்களுக்கு கௌரவம்

பம்பாய், மார்ச் 2

சரித்திரப் பிரசித்திபெற்ற தண்டி யாத்திரையில் கலந்துகொண்ட 24 பெண்கள் நேற்று கௌரவிக்கப்பட்டனர். அன்னை கஸ்தூரிபாயின் சிரார்த்த தினத்தைத் தொடர்ந்து இந்நிகழ்ச்சிகள் இடம்பெற்றன.

சென்னை, மார்ச் 2

ஆட்சிமொழி சம்பந்தமாக திரு. நேருவின் வாக்குறுதி சட்டமூலம் அமுல்நடத்தப்படுமென முதலமைச்சர் திரு. பக்தவத்சலம் சட்டசபையில் பேசும்போது குறிப்பிட்டார்.

ஹிந்தி பற்றி மாணவர்களும் மக்களும் கொண்டுள்ள சந்தேகத்தை இது போக்கிவிடுமென்றும் மத்திய அரசாங்க சேவையில் வேலைவாய்ப்புக்கு இடையூறு இல்லாமல் பார்த்துக்கொள்ளப்படுமென்றும் திரு. பக்தவத்சலம் கூறினார்.

"அரசாங்க

# தொடர்பு மொழியாக தமிழ் இருக்கவேண்டும் இன்றேல் அது அழிந்துவிடும்"

பருத்தித்துறை, செவ்

"இந்த நாட்டின் எதிர்காலத்தை மட்டுமல்லாது தமிழ்பேசும் மக்களின் எதிர்காலத்தையும் இத்தேர்தல் நிர்ணயிக்கும் அளவுக்கு முக்கியம் வாய்ந்தது. தமிழ்பேசும் மக்கள் தமது வாக்கை மிகவும் நிதானமாகப் பயன்படுத்தத் தவறினால் அது திருத்திக் கொள்ள முடியாத தவறாவது மட்டுமல்ல இனத்தை மீளா அடிமையுள் ஆழ்த்திவிடும்.

இத்தேர்தலில் பெரும்பான்மையான தமிழ்காங்கிரஸ் அபேட்சகர்கள் பாராளுமன்றம் சென்றாலன்றி இழந்த உரிமைகளைப்பெற முடியாது. தமிழரசுக்கட்சியை அழைக்கவோ பேச்சு வார்த்தை நடத்தவோ எந்தச் சிங்களக் கட்சிகளும் உடன்படவில்லை. என்பதை திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா திருமலையில் கூறியுள்ளார். தமிழ்க் காங்கிரஸ் கட்சி பாராளுமன்றம் சென்றால் தமிழரின் இழந்த உரிமைகளைப் பெற்றுத்தரத்தவறமாட்டாது"

இவ்வாறு தமிழ்க்காங்கிரஸ் கட்சியின் தலைவர் திரு. ஜீ.ஜீ பொன்னம்பலம் பருத்தித்துறைக் கடற்கரை மைதானத்தில் நடைபெற்ற தமிழ்க்காங்கிரஸ் பிரச்சாரக் கூட்டத்தில் பேசுகையில் கூறினர்.

காங்கிரஸ் கட்சியின் வேட்பாளர் திரு. க. நடராசாவை ஆதரிக்குமுகமாக திரு. பொ. வீரவாகு தலைமையில் நடைபெற்ற மேற்படி கூட்டத்தில் திரு. பொன்னம்பலம் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:-

தமிழ்பேசும் மக்கள் இலங்கையின் எப்பாகத்தில் இருந்தாலும் தமது தாய்ப் பாஷையில் அரசாங்கத்துடன் தொடர்பு வைக்க உரித்தில்லா விட்டால் தமிழினம் அடிமையாகிவிடும்.

இரு மாகாணத்தில் மட்டும் தமிழுக்கு உரிமை கோருவது கேலிக்கிடமான செயல் ஒன்றாகும்.

உண்மையான தமிழ் அரசைப் பெற்றுத் தருவதானால் அதை ஏற்க நாம் ஆயத்தம். இங்கே தமிழரசு பிரசாரம் செய்து ஏமாற்றுகிறார்கள். இவர்களது இந்தப் பிரசாரம் சிங்களவர் மத்தியில் அச்சத்தையும் வெறுப்பையும் ஏற்படுத்தி வருகிறது. இவர்கள் தமிழரசு கோரவில்லை. சமஷ்டி ஆட்சியே கோருகிறார்கள். சமஷ்டி தருவதானால் மத்திய அரசாங்க மொழி சிங்களமாக இருப்பதை ஆதரித்தனர்.

உடுவில் தொகுதி அபேட்சகர் திரு. க. சிவனேசன் பேசுகையில் சமஷ்டி, குடியேற்றம், மொழி, மலைநாட்டு மக்கள் உரிமை என்ற நான்கு அம்சத்திட்டத்தில் எதையும் தமிழரசுக்கட்சியினர் பெறத் தவறிவிட்டனர் என்று கூறினர்.

கிளிநொச்சித் தொகுதி வேட்பாளர் திரு. வி. குமாரசாமி பேசுகையில் வடபகுதியில் துறைமுகம் ஒன்று அபிவிருத்தி செய்யப்பட வேண்டிய அவசியம் பற்றி வற்புறுத்தியதுடன் அதன் மூலம் வேலை வாய்ப்புகள் அதிகரிக்கும் எனக்கூறி இதுசம்பந்தமாக தமிழ்காங்கிரஸ்கட்சி பாராளுமன்றத்தில் நடவடிக்கை எடுக்கும் எனவும் கூறினர்.

## பொதுஜன சேவைச் சங்க வவனியா கிளை

யாழ்ப்பாணம், செவ்வாய்

வவனியா ஸ்ரீ முருகன் தேவஸ்தானத்தில் அகில இலங்கைப் பொதுஜன சேவைச்சங்கக் கிளை சகல சமய வைபவங்களுடன் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது.

அதன் செயலாளர் திரு சி துரைச்சாமி சங்கத்தின் நோக்கங்களை விரிவாகக் கூறி அங்கு சமயவழிபாட்டில் அதி சிரத்தையுடைய ஒரு மாணவனுக்கு "முருகன் மணவாளன்" என்னும் நூலைப் பரிசளித்து ஆண்டுதோறும் வருடாந்த விழாவில் இவ்விதமான பரிசில்கள் வழங்கப்படத் தீர்மானித்திருப்பதாகக் கூறி அங்குள்ளோர் யாவரையும் இச் சங்கத்தால் நிறைவேற்றப்படவிருக்கும் கூட்டுப்பிரார்த்தனை, சமயப்பிரசங்கம், தொண்டர் படை ஆதியனவற்றில் பங்குபற்றும்வண்ணம் வேண்டிக் கொண்டார்.

நிர்வாக சபையினராக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்:

தலைவர்: திரு எஸ் கல்லநாதன், உபதலைவர்கள்: திருவாளர்கள் வே த சுப்பிரமணியம், வயிரவப்பிள்ளை, செயலாளர்: திரு சி துரைச்சாமி, உப செயலாளர்: திரு வ செல்வரத்தினம், தனாதிகாரி: திரு அ பொன்னையா, உபதனாதிகாரி: திரு க சி வேலுப்பிள்ளை. நிர்வாகசபை: திருவாளர்கள் ரி இரத்தினசபாபதி, எஸ நவரத்தினம், க நடராசா, கே கதிரமலை, எஸ கதிரேசு, மு. மயில்வாகனம், எஸ முத்தையா, ரி செல்லத்தம்பி.

---

## இசையாளர் சங்க நிர்வாகிகள்

யாழ்ப்பாணம், செவ்வாய்

யாழ்ப்பாணம் இசையாளர் ஐக்கிய அபிவிருத்திச்சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் அளவெட்டி ஐயனார் கோவில் மண்டபத்தில் திரு. சி. விசுவலிங்கம் தலைமையில் நடைபெற்றது. சங்கத்தின் புதிய நிர்வாகிகளாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: திரு சோ உருத்திராபதி, உப தலைவர். திரு வே மீனாட்சிசுந்தரம், திரு. பெ சின்னராசா, காரியதரிசி: திரு இ நாகராஜா, உதவிக் காரியதரிசி: திரு இ செந்திவேல், பொருளாளர்: திரு க கோபாலசாமி. நிர்வாகசபையினரும் தெரிவு செய்யப்பட்டனர்.

---

## வெற்றி தோல்வி இல்லை

சுழிபுரம், செவ்

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக்கல்லூரிக் கோஷ்டியினருக்கும் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரிக் கோஷ்டியினருக்குமிடையில் சிநேகிதபூர்வமாக நடைபெற்ற கிரிக்கெட் விளையாட்டுப் போட்டி வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது.

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக்கல்லூரி விளையாட்டு மைதானத்தில் கிரிக்கெட் விளையாட்டுப்போட்டி நடைபெற்றது.

## கமத்தொழிலரங்கு

### மிளகாய்

நிகழும் காலபோக காலத்தில் யாழ். மாவட்டத்திலே ஏறத்தாழ 1200 ஏக்கர்களில் மிளகாய் உண்டு பண்ணப்படுகின்றது. இத்தொகையில் வலிகாமம் கிழக்குப் பிரிவில் 600 ஏக்கர்களும் வலி வடக்குப் பிரிவில் 160 ஏக்கர்களும், வடமராட்சிப்பிரிவில் 175 ஏக்கர்களும், தென்மராட்சிப் பிரிவில் 95 ஏக்கர்களும் அமைந்திருக்கின்றன. பெரும்பான்மையான மிளகாய்ப் பயிர் இப்போது காய்க்கும் பருவத்தை அடைந்துள்ளது. மேற்படி முழுநிலப் பரப்பிலுள்ள மிளகாய்ப் பயிரைக் கமக்காரர் பாதுகாத்துச் செய்கைமுறைகளைச் சீர்பட நடாத்தி வருவார்களாயின் குறைந்த படசம் 6000 அந்தர் செத்தல் மிளகாய் இம்மாவட்டத்திலே இக்காலபோகச் செய்கையிலிருந்து கிடைக்கலாம். முதலாம் தரச்செத்தல் மிளகாய் அந்தர் ஒன்றுக்கு அரசாங்கம் ரூபா 252-60 உத்தரவாத விலை வழங்குகின்றது.

இதன்படி அடுத்த சித்திரை, வைகாசி மாதங்களில் இம்மாவட்டத்தில் 13 இலட்சம் ரூபா செத்தல் மிளகாய்மூலம் சம்பாதித்துக் கொள்ளலாம். இது தேறிய இலாபமாகும். செய்கைச்செலவுக்குப் போதிய பணத்தை காய் மிளகாய் விற்பதால் பெற்றுக் கொள்ளலாம். மேலே சொல்லப்பட்ட முழுச் செய்கைப் பரப்பிலிருந்தும் 36 000 அந்தர் காய்மிளகாயும் விளைப்படலாமென மதிக்கப்படுகின்றது. ஒரு இறாத்தல் செத்தல் மிளகாய் 4 அல்லது 5 இறாத்தல் பழ மிளகாயிலிருந்து பெறப்படும். அன்றாட செலவுக்குப் பணம் தேடுவதற்காக காய் மிளகாய் விற்கவேண்டியது அவசியமானாலும் ஓர் இறாத்தல் காய் மிளகாயை 40 சதத்துக்குக் குறைய விற்றல் புத்திசாலித்தனமாகாது. மிளகாய்ச் செய்கைக்கென கூட்டுறவுச்சங்கங்கள் கடன் வழங்குகின்றன.

மிளகாய்ச் செய்கையைப் பாழ்படுத்துவது குருமன் நோய். இது நாற்றுப் பருவத்திலிருந்து பயிர் விளைவுறும் வரை எப்பருவத்திலும் தோற்றக் கூடியது. இதனைப்பரவவிடாது தடுக்கவும் குறைக்கவும் வழிவகைகள் உண்டு. அவற்றுள் முக்கியமானது நாற்றுப்பருவத்தில் வாரமொருமுறையாகவும், நாட்டிய பின்னர் இரு வாரங்கட்கொருமுறையாகவும் கிருமி நாசினி தெளித்தலேயாம். இவ்வாண்டு யாழ். மாவட்டத்தில் நூற்றுக்கு மேற்பட்ட மிளகாய்த் தோட்டங்களில் கிருமிநாசினி தெளித்தல் விவசாயபகுதியினரால் கமக்காரர்களுக்கு ஒழுங்காகச் செய்து காட்டப்பட்டுவருகின்றது. கிரமமாக நடைபெற்றுவரும் இச் செய்து காட்டல்களை மிளகாய்ச் செய்கையாளர் யாவரும் நேரில் கண்டும் விவசாய போதனாசிரியர்களினதும் விவசாய ஓவசியர் மாரினதும் உதவியைப் பெற்றும் தம்தம் மிளகாய்ப்பயிரை காத்து வருதல் உத்தமம். முக்கியமான: கிருமிநாசினிகள் என்றின், பொலிடோல், சுந்தகம் சேர்ந்த டி. டி. ரி. என்பனவாம்.

# "தமிழர் உரிமைக்காக தொடர்ந்து போராடுகிறோம்"

## தமிழரசு பிரசாரக்கூட்டத்தில் கோப்பாய் அபேட்சகர்

கோப்பாய், செவ்வாய்

"இழந்த உரிமைகளைப் பெற்று தன்மானத்துடன் சாதி சமய வேறுபாடின்றி ஒரே குடைக்கீழ் தமிழ் இனம் வாழவேண்டுமென்னும் நோக்கத்துடனேயே அன்றும் இன்றும் தமிழரசுக்கட்சி போராடிவருகின்றது. இன உரிமைக்காக, விசேஷமாக மலைநாட்டுத் தமிழர் நலனுக்காக அயராது உழைத்து வரும் கட்சி இது ஒன்றே தான். சாதிப்பாகுபாடு மக்களை விட்டு அகல வேண்டும் என்னும் நோக்கத்துடனேயே பாதயாத்திரையில் ஈடுபட்டோம். ஓரளவுக்கு வெற்றியும் கண்டோம். இன உரிமைக்காக நாம் செய்த போராட்டங்களினால் இலங்கைத் தமிழ் மக்களிடையே இத்தகைய பெரும் புரட்சியும், பெரும் பிரச்னையும் உண்டு என்பதை வெளி உலகம் அறியும் வண்ணம் காட்டி வைத்த பெருமை எம்மையே சாரும்" என ஊரெழுவில் நடைபெற்ற தமிழரசுக்கட்சித் தேர்தல் பிரசாரக் கூட்டமொன்றில் கோப்பாய்த் தொகுதியில் போட்டியிடும் அபேட்சகர் திரு. ஆ. கதிரவேற்பிள்ளை குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறியதாவது:-

"1949-ம் ஆண்டு உருவாக்கப்பட்ட இக்கட்சி தவழ்ந்து தவழ்ந்து இன்று நடமாடும் கட்சியாக, தமிழ் மக்களின் ஏகோபித்த கட்சியாக விளங்குகிறது.

வடக்கு மாகாணம், கிழக்கு மாகாணம், மலைநாடு ஆகிய இடங்களிலுள்ள தமிழ்மக்களை ஒரே கொள்கையில் ஒன்றுபடுத்தவிருப்பது தமிழரசுக் கட்சியென்று திட்டவட்டமாகக் கூறமுடியும் இதற்கு முன் நிகழ்ந்த சம்பவங்களும் தற்போது நிகழ்ந்துகொண்டிருக்கும் சம்பவங்களும் இதற்குச்சான்று பகரும் தமிழ்மக்களின் உரிமைகளெல்லாம் தீர்வரும்பொதுத் தேர்தலில்தான் நிச்சயம் செய்யப்படும்."

உடுவில்முன்னாள் எம்.பி. திரு. தர்மலிங்கம் கூறியதாவது:-

வாக்காளர் கையில்தான் அரசாங்கம் தங்கியுள்ளது. ஜனநாயக நாட்டிலே சமய அடிப்படையில் ஆட்சி நடைபெறுவதனைக் கண்டித்த டாக்டர் என். எம். தற்போது நம் இலங்கையை ஒரு சிங்கள பௌத்த நாடாக்க அரசாங்கத்துடன் ஒத்துழைத்தமை அனைவருக்கும் தெரியும் ஆனால் தற்போது வேலையில்லாத்திண்டாட்டத்தைப் போக்குவோம், பல ஆலைகளை ஆக்குவோம், பொருளாதார ரீதியாக தமிழ் மக்களின் உரிமைகளைப் பெற்றுக்கொடுப்போம் என்று பிரசாரம் செய்கின்றார்கள்.

தென்னிலங்கையில் எத்தனையோ பெரிய ஆலைகள் உருப்பெற்றது கண்கூடு. ஒரு ஆலைதானும் தமிழ்ப் பிரதேச மத்தியில் இல்லை. ஒரே கட்சியின் கீழ் தமிழ் மக்கள் தம் பிரதிநிதிகளை அனுப்பினால்தான் அரசாங்கத்துடன் வாதாடியோ, வற்புறுத்தியோ, வழக்குரைத்தோ உரிமைகளைப் பெறலாம்"

திருமதி மங்கயர்க்கரசி அமிர்தலிங்கம் பேசும் போது, "தாரக போல் நின்று கூடிய நன்மை செய்த கட்சிக்கே பொன்னான வாக்கைப்போட வேண்டும் அதுவன்றி உற்றார் உறவினர் என்ற ரீதியிலோ, ஒரு சில நன்மை செய்தார் என்ற ரீதியிலோ என் வேலையில்லாத் திண்டாட்டத்தை நீக்கிறார்கள் என்ற ரீதியிலோ வாக்குகளைப் பிரயோகிப்பது தமிழ் இனத்துக்கே இன்னல் விளைவிக்கும். தமிழ் உரிமைப் போராட்டங்கள் நடந்தபோது தமிழ் இனத்திற்கு நடந்த இன்னல்களோ சேதங்களோ அளப்பரிது. எத்தகைய இன்னல் வரினும் நம் கொள்கையின்

(5ம் பக்கம் பார்க்க)


அதிக இலாபமடையுங்கள்

உங்கள் கால் நடைகளுக்கு, முற்றிலும் புதிய, பூரணமாக சமன் செய்த, உயரிய போஷாக்குடைய தீனான

ஹைவிட்டா மீல்

ஊட்டுங்கள்

இது உங்கள் கோழிகளுக்கு ஊட்ட உகந்த அதியுன்னத கலவையுங்கூட.

HYVITA

ஹைவிட்டா உற்பத்திப் பொருட்கள், ஜா-எல மில்ஸ், ஜா-எல.
டெலிபோன்: ஜா-எல-216. கொழும்பு-5767.

புகையிலை—வெங்காயம்—மிளகாய்—கத்தரி—தக்காளி—முந்திரிகை - சோளா முதலிய பயிர்களில் உண்டாகும்
அழுக்கணவனையும்—புழுக்களையும் அழிப்பதற்கு

BAYER

மெற்றசிஸ்ரொக்ஸ் உடன் - டிப்ரெறெக்ஸ்
METASYSTOX DIPTEREX

கலந்து நாற்று மேடையில் இருந்து பாவிக்கத்தொடங்கவும்

PHONE 397 JAFFNA ROYAL DISPENSARY T' GRAMS ROYAEL

## "ஒன்றுபட்ட ...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

கள் பேசியதாவது:

"இன்று தமிழ்மக்களை எதிர் நோக்கியுள்ள பிரச்னை நல்லவர்களை தியாகசீலர்களைப் பாராளுமன்றத்திற்கு தெரிவு செய்தனுப்புவதா அல்லது தேர்தல் காலத்திலே தோன்றுபவர்களை மாத்திரம் தெரிவு செய்வதா என்பதே. எமது மொழி அழியக்கூடாது இனம் மறையக்கூடாது என்பதற்காக நாம் போராட வேண்டிய நிலையில் இருக்கின்றோம். தமிழினம் வருங்காலத்தில் உரிமைகள் பெற்று தலை நிமிர்ந்து வாழ வேண்டும்என்பதற்காக தமிழரசுக் கட்சி போராடி வருகின்றது. உரிமைகளை போராட்டத்தின் மூலமே மீட்டுக் கொள்ள முடியும். இது ஒருவரின் போராட்டம் அல்ல. தமிழினத்தின் விடுதலைப் போராட்டம் இது. இதற்கு எதிராகக் கிடைக்கின்ற ஒவ்வொரு வாக்கும் தமிழரை அடக்கி ஒடுக்க முயலுகின்ற சிங்கள ஏகாதிபத்தியத்தைத் தூண்டுகின்ற வாக்கு என்று உணர்ந்து தமிழ்மக்கள் சிந்தித்து வாக்களித்தல் வேண்டும்.

கூட்டத்தில் தமிழகத்தில் தமிழ்மொழிக்காகத் தங்கள் உயிரைத் தியாகம் செய்த தன்னலமற்ற தியாகிகளுக்கு இருநிமிடம் மௌனம் அனுஷ்டிக்கப்பட்டது.

வழக்கறிஞர் அ. ஆலாலசுந்தரம், திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம், திரு. ராஜரத்தினம் உட்பட பலர் பேசினர்.

ஸ்ரீ மனோகரா (யாழ்ப்பாணம் போன் 485)
ஹொன்னப்பா பாகவதர்
பி. சரோஜாதேவி
நடித்த
மஹாகவி காளிதாஸ்

REGAL — JAFFNA
NOW SHOWING
Nancy Kwan
in
FLOWER DRUM SONG
(Cinemascope - Color)

ஆசிரியருக்குக் கடிதங்கள்

# உண்மை வழி எது?

சோல்பரி ஒற்றையாட்சியால் சிங்கள இனம் ஆளும் இனமாகவும், தமிழினம் ஆளப்படும் இனமாகவும் இருக்கிறதென்பதை நாம் எல்லோரும் கண்கூடாக அறிவோம். இதனை மறைக்கவோ மறுக்கவோ முடியாது.

தமிழ்க்காங்கிரஸ் இதனை முழுமூச்சோடு எதிர்த்து நின்றதையும், ஒற்றையாட்சியில் தமிழினம் அடிமைப்படுத்தப்படுமென்பதை உணர்ந்து சமபல பிரதிநிதித்துவம் வேண்டுமென்று கோரியதும் எமக்கு நினைவிருக்கிறது. இன்று அவ்வரசியல் திட்டத்தின்கீழ் தமிழினம் சிதைக்கப்பட்டு அல்லற்படுகின்ற நிலைமையினை கண்ணாரக் கண்டிருந்தும் அதே ஒற்றையாட்சி எமக்குச் சுயமரியாதையையும் சுபிட்ச வாழ்வையும் அளிக்குமென்று உறுதிசொன்னால் யார்தான் இதனை ஒப்புக்கொள்வர். பெரும்பான்மையினரின் தயவில் வாழ்வதானால் அதுநிலைத்திருக்கக்கூடிய ஒன்றுதுமா?

இந்த ஒற்றையாட்சியில் தேசியம் பேசி இரண்டறக் கலந்து வாழ்வோமானால் காலகதியில் எம்மினம் அழிந்து போகுமென்பது உண்மை.

சோல்பரி ஒற்றையாட்சி தமிழினத்தைச் சுயமரியாதையுடனும் சுபிட்சமாகவும் வாழவைக்குமென்பது உண்மையல்ல. அவ்வாறானால் சமபல பிரதிநிதித்துவமே இருக்க வேண்டும். தமிழினத்துக்குச் சுயநிர்ணய உரிமை வேண்டுமென்ற கொள்கையை கடைப்பிடித்து நின்ற ஜி. ஜி. இன்று அவ்வொற்றையாட்சியில் விமோசனம் உண்டென்று கூறுவதை ஒப்புக்கொள்ள முடியுமா? எனவே இதற்கு ஏதேனும் மாற்று மருந்து இருக்கிறதா என்பதை மேலும் மேலும் நாம் சிந்திக்க வேண்டும்.

தி. பஞ்சாட்சரம்
மண்டைதீவு

## சமஷ்டி ஏன்?

பலமொழி பேசும் இனங்களைக் கொண்ட ஒரு நாட்டிற்கு சமஷ்டி அரசியலமைப்பே இனநியமையாதது என்று முதுபெரும் தலைவர் ராஜாஜி கூறியிருக்கின்றார். அக்கூற்றின்படி நம் இலங்கைக்கு சமஷ்டி அரசியலமைப்பு மிக மிக அவசியம்.

வடக்கு கிழக்கு மாகாணங்களில் போதிய அளவு கடல்வளம் இருக்கின்றது. அத்துடன் கரையோரங்களில் எரிபொருள்களும், எண்ணெய்க் கிணறுகளும் இருக்கின்றன வென்று விஞ்ஞானிகள் கூறியிருக்கின்றார்கள். ஆகவே பொருள்வளம் இல்லையென்று கூறுவது அர்த்தமற்றது.

கனடாவும், செக்கோஸ்லோவேகியாவும், பின்லாந்தும் நல்ல முறையில் மற்றைய நாடுகள் போற்றும்வகையில் சமஷ்டி அரசியலமைப்பை நடத்துகின்றன. இதனால் இங்கு வாழும் சிறுபான்மையோர் அடக்கப்படாமல் ஒடுக்கப்படாமல் சுதந்திரமாக வாழ்கின்றனர். இதைத்தான் தமிழினம் விரும்புகிறதேயல்லாமல் ஒற்றையாட்சியின் கீழ் அடக்கப்பட்டு வாழ விரும்பவில்லை.

தெ. இராசேந்திரம்
நெல்லியடி.

## ஜனநாயகமா? சர்வாதிகாரமா?

1965-ஆம் ஆண்டு மார்ச் 22 இல் இலங்கைப் பாராளுமன்றத் தேர்தல் நடைபெறப் போகின்றது. இத்தேர்தலில் ஜனநாயகத்துக்கும் சர்வாதிகாரத்துக்கும் போராட்டம் என்று சொல்கின்றனர். ஆனால், இலங்கையில் உள்ள தமிழ்ப் பிரதேசங்களில் வேட்பாளர்கள் தமிழ் மக்களின் உரிமைப் பிரச்சனையை வைத்துப் போட்டியிடுகின்றனர். இதில் சில கட்சிகள் பெரும்பான்மை மக்களுடன் ஒத்துழைத்தே தமிழ் மக்கள் உரிமைகளைப் பெற வேண்டும் என்கின்றனர்.

போர்த்துக்கீசர் ஒல்லாந்தர், ஆங்கிலேயர் என்போரால் ஆளப்பட்டு வந்த காலம் வரை சிங்கள மக்களும் தமிழ் மக்களும் ஒத்துழைக்க வில்லையா? சுதந்திரம் பெறமுன் பாராளுமன்றத் தமிழ் அங்கத்தவர்கள் பெரும்பான்மையினருடன் ஒத்துழைக்கவில்லையா?

சிங்கள மக்கள் சர்வாதிகாரமா ஜனநாயகமா என்னும் போது தமிழ் மக்கள் தங்கள் உரிமைகள் என்கின்றனர். பெரும்பான்மை மக்கள் சுதந்திர தமிழ் மக்களின் சம்மதம் இல்லாமல் எவ்வளவோ அநியாயவினங்களைச் செய்து விட்டனர். இது பெரும் பான்மை மக்களின் சர்வாதிகாரப் போக்கு. ஆகையால் தமிழ் மக்களுக்கு இத் தேர்தலில் சர்வாதிகாரமா ஜனநாயகமா என்பதுதான் பிரச்சனை.

கே. பொன்னையா,
காரைநகர்.

## மும்முறை கண்டோம்

'விளக்கம் தருவார்களா' என்ற தலைப்பில் 1-3-65 ஈழநாடு இதழில் வி. என். பி. எழுதியிருந்ததுபோல் எனது கிராமத்திலும் நான் மூன்று தினங்கள் ஒரே நட்சத்திரத்தைக் கண்டேன். முதன்முறையாகத் தென் திசையிலிருந்து மேற்குச் சரிவாக வடக்கு நோக்கி இரவு 8-15 மணியளவில் ஒரு நட்சத்திரம் மின்னி மின்னிச் செல்வதையும் மறுநாள் இரவும் 7-45 மணியளவில் மேற்குத் திசையிலிருந்து உச்சி மேலாக கிழக்குத் திசையையும், மூன்றும்நாள் தென் திசையிலிருந்து கிழக்குச் சரிவாக வடக்குத் திசையையும் நாடிச் செல்வதை நானும் எனது நண்பர் சிலரும் கண்டோம்.

ஆ. ச. பரக்நாமன்
கொக்குவில்

## பஸ் சேவை நிறுத்தப் படவில்லை

தங்கள் 24-2-65 பத்திரிகையில் பஸ் சேவை நிறுத்தப்பட்டுள்ளது என்ற தலையங்கத்தின் கீழ் "கொடிகாமம் - யாழ்ப்பாணம் மாணவர்விசேஷ பஸ்சேவை நிறுத்தப்பட்டுள்ளது" எனப் பிரசுரிக்கப்பட்டுள்ளது. கொடிகாமம்-யாழ்ப்பாணம் பஸ சேவைஒருபொழுதும் நிற்பாட்டப்படவில்லை. ஆனால் கைதடி-சாவகச்சேரி மாணவர் விசேஷ பஸ்சேவை தான் ரத்துச்செய்யப்பட்டது.

ஏ. கந்தையா
தென் யாழ்ப்பாணம்
பஸ் பிரயாணிகள் சங்கம்

## "சிங்களவர்களில் நல்லவர்களும் உண்டு"

— ஜி. ஜி.

உடுப்பிட்டி, செவ்.

"சத்தியாக்கிரகம் செய்து விட்டோம் என்று கூறிக்கொண்டு பாராளுமன்றத்திற்குச் செல்வதை காந்தியடிகள் கூட விரும்பவில்லை. தமிழரசுக் கட்சியின் தேவையற்ற கிளர்ச்சிகளினால் 1958-ல் ஆயிரக்கணக்கான ஆண்களும் பெண்களும் அகதிகளாக கொழும்பு சரஸ்வதி மண்டபத்தில் தஞ்சமடைந்ததையும் அவர்களில் இரு பெண்கள் பிரசவித்ததையும், நாங்கள் அறிவோம். சிங்களவர்கள் எல்லோரும் கெட்டவர்களல்ல, அவர்களிலும் நல்லவர்கள் இருக்கிறார்கள். நமது நிலைமையை நல்லபடியாக எடுத்துச் சொல்லத் திறமை மிக்க தலைவர்களே தேவை."

இவ்வாறு தமிழ்க்காங்கிரஸ் தலைவர் திரு ஜி ஜி. பொன்னம்பலம் உடுப்பிட்டித் தொகுதி காங்கிரஸ் வேட்பாளர் திரு. மு. சிவசிதம்பரத்தை ஆதரிக்குமுகமாக கரணவாய் தெற்கு கலட்டிப் பிள்ளையார் கோவிலுக்கண்மையில் நடைபெற்ற கூட்டத்தில் பேசுகையில் கூறினார்.

உடுப்பிட்டித் தொகுதி வேட்பாள திரு மு. சிவசிதம்பரம் பேசுகையில், ஸ்ரீமாவின் கட்சியின் சார்பில் இங்கு வந்து போட்டியிடும் இடதுசாரிகளைத் தமிழ் மக்கள் ஆதரிக்க முடியாது என்றார்.

வழக்கறிஞர் ஸ்ரீதரன் பேசுகையில் "பாராளுமன்றத்தில் சிங்கள மக்களும் மதிக்கக்கூடிய திறமைசாலிகளையே அனுப்ப வேண்டும். நாம் முன்பு ஒருமித்து அனுப்பியவர்கள் கடந்த ஒன்பது வருஷ காலமாக எதையும் சாதிக்க வில்லை" என்று கூறினார்.

கிளிநொச்சி முன்னாள் எம். பி. திரு. சிவசுந்தரம் திருவாளர்கள் எஸ். கணேசமூர்த்தி, ராஜேந்திரம் ஆகியோருட்படப் பலர் பேசினர்.

கூட்டத்திற்கு வழக்கறிஞர் திரு. சிவபாதசுந்தரம் தலைமை வகித்தார்.

## "தமிழர் . . .

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

றும் வழுவ மாட்டோம் மீண்டும் மீண்டும் இத்தகைய போராட்டங்களை நடத்துவோம். உரிமைக்காகப்போராடுவோம். இதுகாலம்வரைநாம் எடுத்த நடவடிக்கைகளையும் நன்மைகளையும் உன்னிப்பார்க்கும்போது விடுதலைக்காகப் போராடும் கட்சி தமிழரசென்றே நான் கூற விரும்புகின்றேன்" என்று குறிப்பிட்டார்.

## கிழக்கே சிவதொண்டன்நிலையம்

செங்கலடி, செவ்வாய் வருகிற 14-3-65 ஞாயிற்றுக்கிழமை கீழ்மாகாணத்திலுள்ள செங்கலடியில் புதிதாக நிறுவப்பட்டுள்ள சிவதொண்டன் நிலயம் திறந்துவைக்கப்படும்.

இலங்கைக் கலைக்கழகத் தமிழ் நாடகக் குழு நடத்தும் பாடசாலைகளுக்கான
நாடகப் போட்டி - 1965
10-4-65 வரை விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும். விதிகளுக்கு 31-3-65க்கு முன்னர் 'செயலாளர், இலங்கைக் கலைக்கழகம், 135, தர்மபால மாவத்தை, கொழும்பு-7' என்ற முகவரிக்கு எழுதுக. 1642

வரி விளம்பரம்

விற்பனைக்கு
எங்கள் தயாரிப்பிலுள்ள "டோர்ச்" மார்க் அலுமினியப் பாத்திரங்கள் குறைந்த விலையில் எம்மிடம் எப்பொழுதும் பெற்றுக் கொள்ளலாம்.
எவர்சில்வர் மாளிகை, 241, காங்கேசன் துறை வீதி, யாழ்ப்பாணம். 1748

வண்ணார்பண்ணை மேற்கு, பொன்னப்பா லேன், 198/3 இலக்கத்தில் உள்ள காணி 7 பரப்பு 11 குழி விற்பனைக்குளது. விசாரணை 198/3, பொன்னப்பா லேன் (அல்லது) 4, அறுத்துசா லேன், வெள்ளவத்தை. 1745

உரும்பராய் காட்டுவயிரவர் கோவிலுக்கு வடக்கால் 2 கிணறு தோட்டக்காணியும்-வெறும் காணியும் 52 பரப்பு ஒருமித்து அல்லது பிரித்து பாதையுடன் 5—9 பரப்பு ஒவ்வொரு துண்டு. விசாரணை: புரக்டர் திரு. A. தனபாலசிங்கம் ஆனைப்பந்தியும் உரும்பராயும். 1716

வேலை தேவை
வியாபாரத்தில் இருபது வருட அனுபவமுள்ளவரும் சிங்களம் தமிழ் கதைக்க வாசிக்கத் தெரிந்தவரும் உறுதிப்பிணை கட்டக்கூடிய ஒருவருக்கு யாழ் நகருக்குள் மனேஜர் அல்லது கஷியர் வேலை தேவை. அ. துரையப்பா, வர்த்தலைவிளான், தெல்லிப்பளை. 1744

வகுப்புகள்
கீழ்வரும் வகுப்புகளுக்கு விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன. பி. ஏ. ஜி. ஏ. கியூ, க. பொ. த; உயர்தரம்- கலை/விஞ்ஞானம், க. பொ. த. சாதாரணம்—கலை / விஞ்ஞானம் / வர்த்தகம், க. பொ. த. முதல் வருடம் விஞ்ஞானம்; ஆங்கிலம்/ தமிழ் குறுக்கெழுத்து, தட்டெழுத்து. கணக்கியல், வர்த்தகம், சிங்களம், மத்திய எழுதுவினைஞர், தொழில் நுட்பக் கல்லூரி புகுமுகம்; விசேஷ மாலை ஆங்கில வகுப்புகள், அட்சர கேத்திர கணிதம், பௌதிகம், இரசாயனம், உயிரியல் தமிழ்; சரித்திரம், பூமிசாஸ்திரம், குடியியல், பொருளாதாரம். தங்கவசதி உண்டு யுனிவெர்ஸ் இன்ஸ்டிடியூட், நெல்லியடி, கரவெட்டி, 107. பருத்தித்துறை ரோட், நல்லூர், யாழ்ப்பாணம். 1735

நன்றி நவிலல்
காலஞ்சென்ற திரு வ. துரையப்பா (உரிமையாளர், கிராண்ட் ஹொட்டல், யாழ்ப்பாணம்) அவர்களது ஈமச் சடங்குகளில்கலந்தும், அனுதாபம் தெரிவித்தும் பிறவழிகளில் உதவியளித்தும் தமது துக்கத்தைப் பகிர்ந்துகொண்ட அனைவருக்கும் திருமதி பாக்கியம் துரையப்பாவும் அவரது குடும்பத்தினரும் தமது மனப்பூர்வமான நன்றி அறிதலைத் தெரிவித்துக்கொள்கின்றார்கள்,
66, மணிக்கூண்டு வீதி, யாழ்ப்பாணம். 1747

இப்பொழுது திரையிடப்படுகிறது!
கிங்ஸ்லி (கொழும்பு) பிளாசா (வெள்ளவத்தை) நவா (கொம்பனித்தெரு)
ராஜ் (தெகொழும்பு) விஜயா (மட்டக்களப்பு) விஜிதா (ஹட்டன்)
கல்யாணி (நாவலப்பிட்டி) மொடேர்ன் (பதுளை) வெலிங்டன் (யாழ்ப்பாணம்)



யாழ்ப்பாணம் வெலிங்டனில்
தினசரி பி. ப 6-30, 10-00, சனி, ஞாயிறு
காலை 10-30, பி ப 2-30 6-30, 10-00
ஜெமினி கணேசன் - சாவித்திரி (நடித்த)
கற்பகம்

# 4000 பஸ் தேர்தலன்று சேவையிலீடுபடும்

## இ. போ. ச. ஆலோசனை

கொழும்பு, திங்கள்

தேர்தல் தினமான மார்ச் 22-ம் திகதியன்று 4000 பஸ்களை போக்குவரத்து சேவையிலமர்த்த இ. போ. சபை எண்ணியுள்ளது:

தேர்தல் தினத்தன்று தூர இடங்களுக்கு பஸ் போக்கு வரத்து சேவை குறைக்கப்படுமென வும் தேர்தலுக்கு போதிய பஸ்களை சேவையிலமர்த்தவே இவ்வித நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் தெரியவருகிறது.

ரயில் சேவை வழக்கம்போல் நடைபெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

### உள்ளூர் உற்பத்தியாளரின் முறைப்பாடு

கொழும்பு, திங்கள்

உள்ளூர் உற்பத்தியாளர்கள் தமக்கு தமது உற்பத்திக்கு தேவையான மூலப் பொருள்களை வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்வதற்கு வழங்கப்பட்டுள்ள வெளிநாட்டு செலாவணி கோட்டாக்கள் குறித்து மீண்டும் கைத்தொழில் மந்திரிக்கு முறைப்பாடு தெரிவித்துள்ளனர்.

### போக்குவரத்து வசதிகள்

கொழும்பு, திங்கள்

சுமார் 2 லட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்டுள்ள புறக்கோட்டை புதிய பஸ்நிலையத்தை இன்று காலை போக்குவரத்து மந்திரி திரு. அனில் மூனசிங்கா திறந்துவைத்தார்.

கடந்த இருபது வருடங்களாக இயங்காதிருந்த புத்தளம்-கொழும்பு ரயில் சேவை இன்று மீண்டும் ஆரம்பிக்கப்பட்டது. உத்தியோகபூர்வமான முதல் ரயில் சேவை இன்று ஆரம்பிக்கப்பட்டது.

### தோல்புரத்தில் இலவச படக்காட்சி

தொல்புரம், திங்

தொல்புரம் மத்தி சனசமூக நிலைய வாசிகசாலையின் ஆதரவில் நிலைய விளையாட்டு மைதானத்தில், அண்மையில் இலங்கை அமெரிக்க தகவல் பகுதினரால் ஓர் வர்ணத்திரைப்படக் காட்சி காண்பிக்கப் பட்டது. காலஞ் சென்ற ஜோன் கென்னடி திரு. ஜோன்சன் ஆகியோரின் வாழ்க்கையைச் சித்தரிக்கும் காட்சிகளும், அமெரிக்க மக்களின் வாழ்க்கை வரலாறு சம்பந்தமான படங்களும் காண்பிக்கப்பட்டது.

### முன்னைநாள் சபாநாயகரின் கண்டனம்

கொழும்பு, திங்கள்

பத்திரிகை மசோதா அரசாங்கத்தினால் ஜனப்பிரதிநிதிகள் சபையில் கொண்டுவரப்பட்டபோது எதிர்க்கட்சியினர் கிளப்பிய ஒழுங்குப் பிரச்சினை சம்பந்தமாக தாம் தீர்ப்பு வழங்குவதுபற்றி முடிவுசெய்து கொண்டிருக்கையில் அரசாங்க செனட்டர் ஒருவர் தமது அறையுள் வந்து மாலைகோவுக்கு இலங்கை ஸ்தானிகராகச் செல்ல தமக்கு விருப்பமா எனத் தம்மைக் கேட்டதாக முன்னைநாள் ஜனப்பிரதிநிதிகள் சபை சபாநாயகர் திரு. ஹியூபெர்ணண்டோ டெடிகம வில் யு. என். பி. தலைவர் திரு. டட்லி சேனநாயகாவை ஆதரித்து நடைபெற்ற கூட்டத்தல் பேசுகையில் தெரிவித்தார். திரு.பெர்னண்டோ மேலும்தார் பேசுகையில், அந்தச் செனட்டர் தம்மை தவறுக எடை

மலேசியாவில்

### தேர்தல்கள் ரத்து

#### பார்லிமெண்டில் பிரதமா அறிவிப்பு

கோலாலம்பூர், மார்ச் 1

மலேசியாவின் பல பகுதிகளிலும் நடைபெறவிருந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் ரத்துச் செய்யப்பட்டுள்ளதாக பார்லிமெண்டில் பிரதமர் துங்கு அப்துல் ரஹ்மான் தெரிவித்தார். உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களை பயன்படுத்தி இந்தோனேஷியர்கள் கெடுபிடிகளில் ஈடுபட்டுவருவதாலேயே இந்த நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளதாகவும், நடைபெறவேண்டிய கூட்டரசு தேர்தல் நடைபெறும் எனவும் தமது நடவடிக்கை பற்றி விளக்கம் தெரிவிக்கையில் திரு. ரஹ்மான் தெரிவித்தார்.

இன்னொரு கேள்விக்குப் பதிலளிக்கையில், மலேசிய—இந்தோனேஷிய தகராறு குறித்து முன்நிபந்தனையின்றி பேச்சுவார்த்தை நடத்த மலேசியா தயாராக உள்ளதாகவும் திரு. அப்துல் ரஹ்மான் தெரிவித்தார்.

### கல்லோயா ஊழியரின் வேலை நிறுத்தம்

கொழும்பு, திங்கள்

கல்லோயா அபிவிருத்திச் சபையில் மின்சாரப் பகுதியில் வேலைபார்த்துவரும் ஊழியர்கள் நேற்றிரவு வேலைநிறுத்தத்திலீடுபடுவதெனத் தீர்மானித்தனர். சகல தொழிற்சங்கங்களின் கூட்டு ஆலோசனைக் கூட்டத்திலேயே இவ்வாறு தீர்மானிக்கப்பட்டது.

### உதவி ஆணையாளர் வாழ்த்து

சுழிபுரம், திங்கள்

"வட்க்கையும் தெற்கையும் இணைக்கும் நல்லெண்ணக் கோஷ்டியினராக நீங்கள் திகழ வேண்டும்" என யாழ்-மாவட்ட சன சமூக சமாஜத்தினரின் கலாச்சார சுற்றுப் பிரயாண கோஷ்டியினரை வாழ்த்தி அனுப்புகையில் உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு எஸ் சி. மாணிக்கவாசகர் கூறினார். சன சமூக நிலையங்களின் மூலமே இந்நாட்டில் சமூக கலாச்சார கல்லுறவினை நிலை நாட்டமுடியும் எனவும் அவர் கூறினர். இராசவாசல் முதலியார் திரு. சி. தியாகராசா உட்பட பலர் வாழ்த்துரை கூறினர்.

போட்டுவிட்டாரெனவும் அத்தகைய தீய மனிதர்களே சுதந்திரக் கட்சியை நடத்தி வருகிறார்களெனவும் அவர் குறிப்பிட்டார்

### 32 வருடத்தில்....

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

பனியர் 18 நாட்களில் அதனைத் தம்வசமாக்கியது குறிப்பிடத்தக்கது. ஆனால் இப்போதைக்கு அதிலைகைவைக்கும் அறிகுறிகள் காணப்படவில்லை. பிரிட்டிஷ் ஹாங்காங்கில் மட்டுமன்றித் தென்மேற்கில் 40 மைல் தொலைவிலுள்ள போர்ச்சுக்கீசிய தீவான மாக்காவிலும் காலனித்துவம் உயிர்வாழ்வதற்கு மாசேதுங் அனுமதிப்பதாக முன்னாள் ரஷ்யப் பிரதமர் குருஷ்சேவ் கடிந்தும் மாஸேதுங் உணர்ச்சியற்ற பிண்டமாகவே விளங்கினார். அடுத்த 10 ஆண்டுகளுக்கு ஹாங்காங் காலனியில் சீனா கைவைக்காதென்றே பிரிட்டிஷாரும் சில வணிகர்களும் மதிப்பிடுகின்றனர். அதைத் தன்வசம் எடுத்துக்கொள்வதின் மூலம் தலைவலியும் பொருளாதார ரச்சையும் தான் சீனாவுக்கு ஏற்படுமென்று பொதுவாக வாதிக்கப்படுகிறது. 15 கோடி மக்களை அவர்களில் 80 சதவிகிதத்தினர் பயங்கர அனுபவங்களோடு அகதிகளாய் வந்தவர்கள். கட்டுப்படுத்துவது பெரிய பிரச்சினையாகும். இதன் விளைவாக ஆசிய ஆபிரிக்க நாடுகளிடம் தனது கௌரவத்தை இழக்கும் பிரச்சினை இதில் சம்பந்தப்பட்டிருக்கிறது. அதே நேரத்தில் 35000 பிரிட்டிஷாரும் இதர ஐரோப்பியரும் 40 லட்சம் சீனர்களும் அந்தச் சிறிய தீவில் சுபிட்சமாய் வாழ்கின்றனர். சோவியத்தின் பண உதவிகளைக் குறைவாகப் பெறும் சீன வேளாண்மைக் காலத்திலும் பஞ்சக்காலத்திலும் ஹாங்காங் வழியாகவே தனது அந்நிய செலாவணியை நாடுகிறதென்பதற்கு இது ஓர் அறிகுறியாகும். மாடிவீடுகள், தொழிற்சாலைகள், ஆலைகள், துறைமுகங்கள் பெருக்கப்படுவருகின்றன. சுற்றுப் பயணத்துறையும் நல்ல வருவாயை ஈட்டித்தருகிறது. மேலும் ஹாங்காங் தீர்வையற்ற துறைமுகம். வாரத்திற்கு 23 எல்லா நவீனவிமானங்களும் வந்துசெல்கின்றன. 1964ல் மட்டும் 74வகை இனங்களைச் சேர்ந்த 4,00,000 சுற்றுப் பயணிகள் வந்துசென்றனர். ஒவ்வொரு பயணியும் சராசரி 1750 ரூபா செலவிட்டிருக்கின்றனர். அமெரிக்காவிலிருந்து 31 சதவிகிதத்தினரும் காமன்வெல்த் நாடுகளிலிருந்து 27 சதவிகிதத்தினரும் வருகின்றனர்.

வரிவிதிப்பும் ஹாங்காங்கில் குறைவு. அவை நடுத்தர குறைந்த வருவாயை உடைய மக்களிடமிருந்து வசூலிக்கப்படுவது வெகு அற்பமாகும். கூட்டுவணிக நிறுவனங்களின் ஆதாய வரிதான் முக்கியமாகப் பெறும் வரியாகும். சட்டப்படி இன்னும் 32 ஆண்டுகளில் அதன் கெடு முடிவுறும் மிரட்டல் இருந்தபோதிலும் ஹாங்காங்கில் முன்னைக் காட்டிலும் வாணிபம் சிறப்பாகவே இருக்கிறது.

### சிசுக் கொலை . . .

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

குப்புரை நிகழ்த்தியபின் நீதியரசர் தமது தொகுப்புரையை ஆரம்பித்தார். இதன்பின் ஜூரர்கள் தனிமையில் ஆலோசனை செய்தனர். ஜூரர்களின் தீர்ப்பை ஏற்று நீதியரசர் எதிரியை விடுதலை செய்தார்.

எதிரிசார்பில் வழக்கறிஞர் திரு. எஸ். நாகராசா, திரு. பாலக்குமாரின் அனுசரணையுடன் ஆஜரானர். எதிரிக்காக அரசாங்கத்தால் திரு தவராசிங்கம் யோகநாதன் நியமிக்கப்பட்டிருந்தார்.

நீதிமன்றத்திற்கு வெளியே வந்ததும் எதிரி தனது வழக்கறிஞருக்குக் கைகூப்பி நன்றி தெரிவித்தார்.

வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

# மண்டபம் முகாமை மூடுவதுபற்றி ஆலோசனை

கொழும்பு, செவ்

தென் இந்தியாவில் உள்ள இலங்கைக்குச் சொந்தமான மண்டபம் முகாமை மூடிவிடுவது பற்றி இலங்கை அதிகாரிகள் ஆலோசித்து வருகிறார்கள் எனத் தெரிகிறது.

இலங்கை குடியேற்ற வெளியேற்ற இலாகாவின் கீழ் இயங்கிவந்த மண்டபம்முகாம் இப்பொழுது அதிகமாக மூடப்பட்டே இருக்கிறது. முன்னர் பாஸ்போட், தற்காலிக விசா ஆகிய வேலைகள் இங்கேயே செய்யப்பட்டு வந்தன. ஆனால் இப்பொழுது சென்னையில் உள்ள இலங்கைஉதவித்தூதர் காரியாலயத்தில் இவ்வேலைகள் கவனிக்கப் படுகின்றன. இந்த முகாமைப் பராமரிப்பதில் இலங்கை அரசாங்கத்துக்கு வருடம் ஒன்றுக்கு 6000 ரூபா செலவாகி வருகிறது. இங்கு உத்தியோகத்தர்களுக்கான விடுதிகளும், தடுப்பு முகாமும் இருக்கின்றன. எனினும் இப்போது இது எவ்வித பயனுமற்றுக் கிடக்கிறது எனலாம். அண்மையில் வீசிய சூறாவளியால் விடிழந்த மக்கள் இதில் வசித்துவருகிறார்கள்.

இந்த முகாமை மூடிவிடுவது பற்றி குடியேற்ற, வெளியேற்ற இலாகா அதிகாரிகள் ஆலோசனை நடத்திவருகிறார்கள் என்றும் அதிகமாக மிக விரைவில் இது மூடப்படலாம் என்றும் விஷயமறிந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

### தியாகிகளுக்கு அனுதாபம்

ஓமந்தை, செவ்;

"தமிழ் நாட்டில் இந்தி அரசியல் மொழியாவதை எதிர்த்து உயிர்த்தியாகம் செய்த வீரத் தமிழர்களினதும் பல துன்பங்களை அனுபவித்தவர்களினதும் பெயர்களை தமிழ் நாட்டில் மட்டுமின்றி தமிழ் மக்கள் வாழ் உலகமெல்லாம் கல்வெட்டுக்களில் பொறிக்க வேண்டும். சேர சோழ பாண்டியன் காலத்தில் போரில் தன்மகன் புறமுதுகுகாட்டி இறந்ததைக் கேட்ட தாய் அவன் குடித்த முலையை வெட்டுவேன் என்று கூறிய அக்கால தாய்மார்களைப் போல இன்றும் உண்டு என்பதை [illegible] கூடியதாக அமைந்துள்ளது.

இந்தி எதிர்ப்பு தியாகிகட்கு அனுதாபம் தெரிவித்து திரு. பெ. நடராசா தலைமையில் சரவணை நாவலர் விளையாட்டுக் கழகவவனியாக்கினை கூட்டத்தில் மேற்கண்ட தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

### பொதுமேடை

நீர்வேலி, செவ்வாய்

திரு மு பாலசுந்தரம் பொதுமேடையில் விவாதிப்பதற்குவரும்படி விடுத்த அழைப்பைத்தமிழரசுக்கட்சி ஏற்றுள்ளது. விவாதம் இன்று செவ்வாய்க்கிழமை மாலை புத்தூரில் நடைபெறும். மேற்படி விவாதத்தில் திரு மு பாலசுந்தரத்தை தமிழரசுக் கட்சியில் நியமிக்காதது ஏன் என்ற விபரத்தை திரு அ அமிர்தலிங்கமும், திரு சா ஜே வி செல்வநாயகமும் தெரிவிப்பார்கள்.

### நன்றி நவிலல்

சென்ற ஞாயிற்றுக்கிழமை 21-2-65 ல் இறைவனடியேகிய மு. பொன்னம்பலம் (ஸ்தாபகர், மு. பொன்னம்பலம் அன் சன்ஸ்) அவர்களின் ஈமக்கிரியையில் பங்குபற்றியவர்களுக்கும் அனுதாபச் செய்தியனுப்பியவர்களுக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

பொன்னம்பலம் அன் சன்ஸ்
215, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம். 1750

### கிரிதாரை ஆலை விற்கப்படும்

கொழும்பு, செவ்வாய்

நிதிமந்திரிக்குச் சொந்தமான கிரிதாரை ஆலை இரண்டு அல்லது மூன்று வாரங்களில் விற்கப்படும் என சொல்லப்படுகிறது. இப்பொழுது ஆலையை நடத்திவரும் வர்த்தகரே அந்த ஆலையை வாங்கவிருக்கிறார் எனவும் இதற்கான முயற்சியில் பிரபல நிதி உதவிக்கம்பனி ஒன்று ஈடுபட்டுள்ளதாக நம்பகமாக கூறப்படுகிறது.

டாக்டர் என். எம். பெரேராவுக்குச் சொந்தமான இந்த ஆலை குத்தகைக்கு அவரது மருமகனுக்குக் கொடுக்கப்பட்டது. டாக்டர் பெரேராவின் மருமகன் அதை இன்னொருவருக்குக் குத்தகைக்குக் கொடுத்தார். குத்தகைப் பணமாக மாதம் ஒன்றுக்கு 6000 ரூபா டாக்டர் பெரேராவுக்குச் செலுத்தப்பட்டு வந்தது. ஆலையை இப்பொழுது குத்தகைக்கு எடுத்து நடத்தும் அந்த வர்த்தகர் இப்பொழுது ஆலையை தனக்குச் சொந்தமாக வாங்க முன்வந்துள்ளார். ஆலைக்கான முதலீட்டுப் பணத்தை டாக்டர் பெரேராவுக்குச் செலுத்தும் பொருட்டு ஆலையை வாங்கவிருக்கும் வர்த்தகருக்கு இலங்கை வங்கியிலிருந்து கடன் பெறுவதற்கு முன்னர் குறிப்பிட்ட நிதிஉதவிச் சங்கம் முயற்சி எடுத்து வருகிறது. டாக்டர் என். எம் பெரேரா இலங்கை வங்கியிலிருந்து கடன் பெறுவதற்கும் இந்த நிதிஉதவிச் சங்கமே உதவி செய்தது என்பது குறிப்பிடத்தக்கது.

### கிராமசபை கூட்டம்

யாழ்ப்பாணம், புதன்

சென்றமுறை ஒத்திவைக்கப்பட்ட கொக்குவில் கிராம சபையின் கூட்டம் இம்மாதம் 5-ந் திகதி நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

மந்துவிலில்

**மாபெரும் கூட்டம்**

பாரிஸ்டர் சிவானந்தன் அவர்களை ஆதரித்து இன்று மாலை 6 மணிக்கு நடைபெறும்

S. R. S.

ஜவுளி மாளிகையில்

6 யார், 7 யார் கைத்தறிச் சேலைகள், 100-ம் நம்பர் 120-ம் நம்பர் நூல்களால் எங்கள் சொந்த தறிகளில் தயார் செய்யப்பட்ட நித்தபாவனைக்குரிய சேலைகள் விற்பனைக்குத் தயாராகவிருக்கிறது.

6 யார், 7 யார் லங்கா சேலைகளும்; லங்கா வேட்டி சால்வைகளும் மலிவான விலைகளில் கிடைக்கும்.

சங்கக் கடைகளுக்கும், வியாபாரிகளுக்கும் விசேஷ கழிவு உண்டு.

எஸ். ஆர். செல்லத்துரை
216, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.
போன்: 296.

### காணவில்லை

மா. வீரசிங்கம், வீ. சிவஞானம்மா, வீ. ரவீந்திரன், வீ. பத்மாதேவி, வீ. ரவிரஞ்சன், வீ. ரவிசந்திரன், வீ. ரஞ்சனா தேவி, மா. நடராசா, க. அன்னம் ஆகிய 9 கூப்பன் புத்தகங்கள் தவறிப்போய்விட்டது. தேடி கீழ்க்காணும் விலாசத்தில் ஒப்படைப்பவர்களுக்கு ரூபா 25 சன்மானம் வழங்கப்படும். மா. வீரசிங்கம், ரஞ்சன் ஜுன்ஸ்போர்ட் சேவீஸ் உரிமையாளர், கொண்டாவில் கிழக்கு. 1746

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி 68-ம் இலக்கத்தி [illegible] 1965-ம் ஆண்டு மார்ச் [illegible]